REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜனவரி 17 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 14 | Monday 17,January, 2022 | 12பக்கங்கள் | 30/-

## மாலைதீவு சபாநாயகர் இலங்கை விஜயம்



மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அவருடன் இரண்டு பேர் கொண்ட தூதுக்குழுவும் நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

06

# அனைத்து வாக்குறுதிகளும் மூன்று வருடங்களில் நிறைவேற்றப்படும்

## பொய்ப் பிரசாரங்களினால் மனம் தளராது நாட்டு நலனுக்காக ஒன்றிணைய அழைப்பு

### நெடுஞ்சாலை திறப்பு விழாவில் ஜனாதிபதி கோட்டாபய உரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐந்து வருடங்களில் நிறைவேற்றுவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் எதிர்வரும் மூன்று வருடங்களில் முழுமையாக நிறைவேற்றுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விவசாய குடும்பத்தைச் சேர்ந்த தலைவர் என்ற வகையில் நாட்டின் விவசாயிகளை பாதுகாப்பதற்கு எப்போதும் முன்னுரிமையளித்து செயற்படுவதாக உறுதியளித்துள்ள ஜனாதிபதி, தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் வயல்களில் கால்பதித்து விவசாயத்தில் ஈடுபட்ட இளைஞர்களை ஒரு போதும் மறக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார். அத்தகைய இளைஞர்களை தொடர்ந்தும்

06



## அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவுக்கு இந்தியா உதவி



**1.5 பில்லியன் அமெ. டொலர் வழங்க பெசில்– ஜெய்சங்கர் பேச்சில் உடன்பாடு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை வழங்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்குமிடையில் சூம் தொழில் நுட்பத்தினூடாக நடைபெற்றுள்ள விசேட பேச்சுவார்த்தையின் போது அது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை,

06



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (16) கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். அங்கு வந்திருந்த பொதுமக்களுடன் அவர் உரையாடுவதை படத்தில் காணலாம்.

## எரிவாயு சிலிண்டருக்கு இனி தட்டுப்பாடு கிடையாது





எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது விநியோகத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் உள்ளதாகவும் இனிமேல் மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கும் அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

கடந்த காலங்களில் நாளாந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான கேள்வி சுமார் இரண்டு இலட்சமாகக் காணப்பட்டது. எனினும், தற்போது அந்த எண்ணிக்கை 90 ஆயிரமாக காணப்படுகின்றது. இதன்படி, நிறுவனம் தற்போது நாளாந்தம் 90 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கின்றது. இரண்டரைக் கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர்களைப் பகிர்ந்தளிப்பதில் சிறு தாமதம் நிலவுதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

## நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்புகிறது

### மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்

**(எம்.ஏ. அமீனுல்லா )**



நட்டின் பொருளாதாரத்தில் தற்போது முன்னேற்றகரமான நிலை காணப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுலாத் துறை படிப்படியாக முன்னேற்றம் கண்டு வரும்நிலையில் ஏனைய துறைகளின் முன்னேற்றமும் குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கண்டிக்கு விஜயம் செய்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை சந்திந்தித்து ஆசி

06

## ஒமிக்ரோன் முதன்மை வைரஸாக மாறும் அபாயம்

### 5 மாவட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணல்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் இதுவரை 208 ஒமிக்ரோன் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட ஒவ்வாமை, மூலக்கூற்று நுண்ணுயிர் பிரிவின் தலைவரான கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். டெல்டாவை முந்திக்கொண்டு ஒமிக்ரோன் திரிபு வேகமாக பரவும் நிலை காணப்படுவதால் இலங்கையின் முக்கிய வைரஸாக

06

## பொரளை தேவாலய சம்பவத்துடன் தொடர்புபட்ட சகலரும் கைதாவர்

### விசாரணைகள் நிறைவடையும் முன்பு வீணான விமர்சனங்கள் வேண்டாம்

**ஸாதிக் ஷிஹான்**

பொரளை தேவாலயத்தில் கைக் குண்டு கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சகல சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் கண்டிப்பாக நிறுத்தப்படுவரென பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார். விசாரணைகள் முடிவு பெறுவதற்கு முன்னர் அது தொடர்பில் வீணான விமர்சனங்களை மேற்கொள்ள வேண்டாமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சமயத் தலங்கள் புனிதத் தலங்களில் இது போன்ற எந்த ஒரு சம்பவங்களும் இடம்பெற நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

06



## மத்திய நெடுஞ்சாலை; புதிய கட்டண விபரம் அறிவிப்பு

புதிதாக திறக்கப்பட்டுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம முதல் குருநாகல் வரையிலான வீதியில் நேற்று நண்பகல் வரையில் வாகனங்கள் கட்டணம் இன்றி பயணிக்க அனுமதி வழங்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் இதனை தெரிவித்துள்ளார். அதன்படி, நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நேற்றுமுன்தினம் முதல் நேற்று நண்பகல் 12 மணிவரை குறித்த வீதியை கட்டணம் இன்றி பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

06

## மின்சார சபை - பெற்றோலியக் கூ.தாபனம் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை இன்று

### நாளை வரை மின் துண்டிப்பு இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இன்று முக்கிய பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

எவ்வாறெனினும் நாளை 18ஆம் திகதிவரை வரை நாட்டில் மின் துண்டிப்பு இடம்பெறாது என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் காமினி லொக்குகே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மின்சார சபைக்கு 3,000

06

அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின்

## வாகனங்கள், காணிகள் தொடர்பில் தகவல்கள் திரட்ட நடவடிக்கை

### நிதியமைச்சின் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அமைச்சுக்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களில் உபயோகிக்கப்படும் வாகனங்கள், காணிகள், கட்டடங்கள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சின் கட்டுப்பாட்டாளர் நாயகம் கே.ஏ. ரம்ய காந்தி தெரிவித்துள்ளார். அதற்கிணங்க அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மேற்படி தகவல்களை எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிதியமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

06

## சந்திரிகா, முன்னாள் அமைச்சர்கள் உள்ளடங்கிய புதிய கட்சி உதயம்



புதிய அரசியல் கட்சியொன்றை அடுத்த மாத முதற்பகுதியில் ஆரம்பிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதன் போசகராக செயற்பட இருப்பதோடு முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் பலரும் இதில் இணைய உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

எமது கட்சியின் தலைமைக்காரியாலயம் எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் திறக்கப்படும். புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கவும் அனைவரும் சமத்துவமாக வாழும் அமைதியான சூழல் ஒன்றை கட்டியெழுப்புவதற்கும் உகந்த சமூகத்தினை வழிநடத்தக்கூடிய அரசியல் கட்சியொன்று

06

## 13 ஐ எதிர்ப்போர் மாற்று போராட்ட பயணத்தை முன்னெடுக்க வேண்டும்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் போராட்ட அறிவிப்பை முழு மனதுடன் வரவேற்பதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். ஊடக அறிக்கை விடுவதெல்லாம் போராட்டம் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

## வங்கிகளுக்கு டொலர் விநியோகிப்பதில் தாமதம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



### அத்தியாவசிய பொருட்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு டொலர் விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டு வரும் நிலையில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வங்கிகளுக்கு டொலர் விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டு வரும் நிலையில் கடந்த இரண்டு மாத காலமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட அத்தியாவசியப்

06

## 4 மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்த நேரிடும்

### – மின் பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை



எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவதால் நாட்டில் பாரிய மின்வெட்டு ஏற்படக்கூடும் எனவும் இதனால் நாளாந்தம் நான்கு மணித்தியாலங்கள் மின்வெட்டுக்கு தயாராக இருக்குமாறு பொது மக்களை கேட்டுக்கொள்வதாகவும் மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவாடு தெரிவித்தார்.

சுமார் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமான 3000 மெற்றிக் தொன் டீசல் மாத்திரமே இலங்கை மின்சார சபையிடம் காணப்படுகின்றது. அத்துடன், 22 நாட்களுக்கு மாத்திரம் தேவையான உராய்வு

06

**விக்கல் வீராச்சாமி**



தமிழ் பேசும் கட்சிகளின்ர ஆவண தயாரிப்புக்கு ஆதரவு, அதுக்கு எதிரான கஜேந்திரகுமாரின்ர ஆர்ப்பாட்டத்துக்கும் ஆதரவு, தலைவர என்ன சொல்ல....

எங்க நிண்டா ஊடகங்களில படமும் செய்தியும் வருமோ அங்கெல்லாம் அவர் நிற்பார், நன்மை தீமை எல்லாம் அதுக்கு அப்புறம்தான்...!!!

**89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட திறப்பு விழா

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் கோலாகலமாக ஆரம்பம்






















**தொழுகை நேரம்**

16முதல் 17 வரை

சுபஹ் - 05.07
ளுஹர் - 12.22
அஸர் - 03.44
மஃரிப் - 06.14
இஷா - 07.28

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 4

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: பவுர்ணமி

# 30 நாட்களுக்குள் குருநாகல்-தம்புள்ள நெடுஞ்சாலை பணிகள் ஆரம்பம்

## - ஜனாதிபதி பணித்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பழி வாங்கும் நோக்கில் இந்த அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதை நிறுத்தியது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் வீதிகளை அமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது, அந்த செலவில் தங்கத்தில் வீ தி களை அமைக்கலாம் என் று கூறப்பட்டது. 25,000 இலட்சம் ரூபாவிற்கு ஒரு கிலோமீட்டரை நிர்மாணிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு ஒரு கிலோமீற்றர் நிர்மாணத்திற்காக 35,000 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. இப்படித்தான் நல்லாட்சி ஏமாற்றியது. ஒரு கிலோமீற்றர் நிர்மாணிக்க மேலதிகமாக 10,000 இலட்சம் வழங்கப்பட்டது. கடவத்தை முதல் மீரிகம வரையான பகுதியின் நிர்மாணப்பணிகளுக்காக மேலதிகமாக ரூபா 15,000 இலட்சம் வழங்கப்பட்டது.

குருநாகலிலிருந்து தம்புள்ளை வரையிலான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகளை எதிர்வரும் 30 நாட்களுக்குள் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எனக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். இப்படி நேரடியாக முடிவெடுப்பதுதான் எங்கள் தலைமைத்துவத்தின் விசேடமாகும். எதிரணியால் எமது ஜனாதிபதியையும் எமது அரசாங்கத்தையும் கவிழ்க்க முடியாது.

பயங்கரவாதிகளிடம் இருந்து இந்த பூமியை காப்பாற்றுவதற்கு தலைமைத்துவத்தை வழங்கியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தடுப்பூசி மூலம் கோவிட் தொற்றுநோயிலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றிய தலைவர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச. அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசியலில் ஈடுபடவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக அவர் கோவிட் தொற்றிலிருந்து மக்களைக் காப்பதற்காக பாடுபட்டார். எமது ஜனாதிபதி தடுப்பூசி ஏற்றி மக்களைக் காப்பாற்ற முனைந்தார். தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவரான அவர் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வார்.

மூன்று மொழிகளில் பேசும் ஒருவர் இப்போது நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பேஸ்புக்கில் தோன்றுகிறார். திஸாநாயக்கவின் பின்னால் சென்று அவரை ஜனாதிபதியாக்க எமது ஊர்களில் எவரும் தயாராக இல்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 69 இலட்சம் பேர் அவரைப் பாதுகாக்க தயாராக உள்ளனர். இந்த நாட்டில் ஊழலற்ற ஆட்சி முன்னெடுக்கப்படும் என

06

## பலாங்கொடை , மாவனல்லை சபை தலைவர்கள் பதவிநீக்கம்

பலாங்கொடை நகரசபைத் தலைவர் மற்றும் மாவனல்லை பிரதேச சபைத் தலைவர் ஆகிய இருவரையும் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் பதவியிலிருந்து விலக்குவதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்ட யோசனைகள் தோல்வியடைந்துள்ள நிலையில் அதற்கான தீரமானத்தை சப்ரகமுவ மாகாண ஆளுநர் மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கானவர்த்தமானியொன்று வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க பலாங்கொடை நகரசபைத் தலைவர் சாமிக்க ஜயமினி வெவேகெதர மற்றும் மாவனல்லைப் பிரதேச சபைத்தலைவர் சந்தனகுமார ஜயவர்தன ஆகியோரே அவர்கள் வகித்த பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ)

## இருமாடி வீடு இடிந்து விழுந்ததில் இருவர் காயம்

கொழும்பு கிராண்ட்பாஸ் பாலத்துறை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த இரண்டு மாடி வீடு இடிந்து விழுந்ததில் இரண்டு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று நடந்துள்ளது.வீட்டை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கட்டட நிர்மாண தொழிலாளி ஒருவரும் அயல் வீட்டில் இருந்த 14 வயதான பாடசாலை மாணவனுமே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

வீடு இடிந்து விழுந்த இடிபாடுகளுக்கு சிக்கி இருந்த இவர்கள் அருகில் இருந்தவர்கள் மீட்டுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனனர்.

சம்பவம் குறித்து கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த. உ/த பரீட்சைகள்:**

# வகுப்புகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகளுக்கு தடை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஐந்தாம் ஆண்டு மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ள நிலையில் பயிற்சிகள் தொடர்பான வகுப்புகள் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க நாளை 18 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நிறைவுறும் வரை இவ்வாறான வகுப்புகள் கருத்தரங்குகள் சொற்பொழிவுகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பெப்ரவரி முதலாம் திகதி நள்ளிரவு முதல் க.பொ.த. உயர்தர பரீட்சை நிறைவுறும் வரை வகுப்புகள் கருத்தரங்குகள் சொற்பொழிவுகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை மீறி சட்டவிரோதமாக கருத்தரங்குகள் சொற்பொழிவுகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் பொலிஸ் தலைமையகத்தின் 0112421111, பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119, பரீட்சைகள் திணைக்களத்தின் அவசர அழைப்புக்கான இலக்கமான 1911, 011 2785211 அல்லது 011 2785212 என்ற பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கோ அறிவிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாடளாவிய 2943 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சையை நடத்த எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் மார்ச் 05 ஆம்

06

# தமிழர் நல்வாழ்வுக்காக என்றும் இந்திய அரசு துணை நிற்கும்

## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

'இந்திய அரசாங்கம் தமிழர் நல்வாழ்வுக்காக என்றென்றும் துணை நிற்குமென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்திய அரசாங்க நிதி உதவியினூடாக மலையக பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட இந்திய வீடமைப்பு திட்ட வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தி அதனை பயனாளிகளுக்கு கையளிப்பதற்கான திறப்புகளை வழங்கும் வைபவம் (15) கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையிலும், இந்தியாவிலும் பசுக்கள், காளைகள் தெய்வங்களாக பார்க்கப்படுகின்றன. பொங்கல் என்பது சூரியனுக்கு நன்றி செலுத்துவதாகும். காரணம் சூரியனே எமது வாழ்க்கைக்கு உதவியளிக்கின்றது. அதற்கும் மேலதிகமாக திருவள்ளுவர் நாளும் இன்றாகும். வள்ளுவர் பெருமான் உலகுக்கு நல்ல பல நெறிகளை தந்துள்ளார் என்பதை மறக்க கூடாது. இன்று மலையகத்தை வழி நடத்துபவர்களாக ஜீவன் தொண்டமானும், செந்தில் தொண்டமானும் உள்ளனர்.மலையகத்தில் இந்திய உதவியின் கீழ் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்திய வீட்டுத் திட்டங்கள் சில நிறைவடையும் நிலையில் உள்ளன.

இலங்கை மக்களின் தேவையறிந்து இந்தியா செயற்படுகின்றது. இதன் மூலம் இந்திய இலங்கை உறவு சக்திமிக்கதாய் மாறுகின்றது. எதிர்காலத்தில் மலையகத்தில் பல வீட்டுத் திட்டங்ளை முன்னெடுப்போம். மலையக நண்பர்களின் வீடுக்கான கனவு நனவாகும்.

அனைத்து தமிழ், மக்களுக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

# இரண்டரை கோடி ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் மீட்பு; ஒருவர் கைது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இரண்டரை கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 4000 போதை மாத்திரைகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் அதுதொடர்பில் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாகவும் சுங்கத் திணைக்களப் பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.



இரண்டரைக் கோடிக்கும் அதிகமான பெறுமதியுடைய மெனபேடமின் அடங்கிய எக்ஸடை என்ற போதை மாத்திரைகளையே சுங்க அதிகாரிகள் இவ்வாறு கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்திலிருந்து யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட ஒருவருக்கு அனுப்பப்பட்டிருந்த பொதியொன்றை பரிசோதனைக்கு உட்படுத்திய போது சூட்சுமமாக மறைத்து வைத்து கொண்டுவரப்பட்டுள்ள மேற்படி போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விளையாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய பொதி என சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதுடன் காட்போட் பெட்டிகள் மூலம் இதை சூட்சுமமான முறையில் சம்பந்தப்பட்டவர் அதனை பொதி செய்து வைத்திருந்ததாகவும் அந்த போதை மாத்திரைகள் 1600 கிராம் எடையுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பொதியை கொண்டுசெல்வதற்காக மத்திய தபால் பரிமாற்ற பிரிவிற்கு வருகை தந்திருந்த வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். மேற்படி போதை மாத்திரைகளை கடத்திவந்துள்ளமை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

# எரிபொருள் இறக்குமதிக்கு 4000 பில்.டொலர் தேவை

Ceylon Petroleum Corporation
ලංකා ඛනිජතෙල් නීතිගත සංස්ථාව
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

இவ்வருடத்தின் இறுதி காலப்பகுதிகளுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 4 ஆயிரம் பில்லியன் அமெரிக்க டொலரை மத்திய வங்கி கட்டம் கட்டமாக விடுவிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.மின்சாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளுக்கு தடையில்லாமல் எரிபொருளை விநியோகிக்க வேண்டுமாயின் மத்திய வங்கி எரிபொருள் இறக்குமதிக்கான டொலரை தாமதமில்லாமல் விடுவிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி,மக்கள் வங்கி, நிதியமைச்சு,வலு சக்தி அமைச்சு,மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார சபை,இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவன தலைவர்களுடான கூட்டத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இதனை தெரிவித்துள்ளது.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை ஆகிய இரு பிரதான துறைகளுக்கும் தடையில்லாமல் எரிபொருள் விநியோகிப்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் தேவையான எரிபொருளை வழங்காததால் மின்சார துண்டிப்பு மேற்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது தெரிந்ததே.

# மலையக தைப்பொங்கல் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்பு



தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (16) நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் தலைமையில் இந்த தைப் பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஆரம்ப நிகழ்வாக சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சூரியப்பொங்கல் பொங்கி விழாவை ஆரம்பித்து வைத்தார்.இதனைத்தொடர்ந்து விசேட அம்சமாக வரவேற்பு நடனம், மற்றும் மலையகப் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் உரையாற்றியதோடு, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கண்டிக்கான இந்திய உதவி தூதுவர் ஆதிரா, பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வேலுகுமார், வடிவேல் சுரேஷ், தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திர சாப்டர் மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், சரஸ்வரதி சிவகுரு, முத்தையா ராம் கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




தங்காலை, ஆண்கள் பாடசாலையின் நிர்வாகக் கட்டிடத்தொகுதியினை இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் டி. வீ.சானக ஆகியோர் வைபவரீதியாக திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

## சத்யநாராயண பூஜை இன்று கொழும்பில்

ஸ்ரீ வரதராஜ விநாயகப்பெருமான் அநுக்கிரகத்துடன் கொழும்பு சாய் நாதனின் சரணாலயத்தில் சத்யநாராயண பூஜை இன்று (17) திங்கட் கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பகல் சாய் ஆரத்தியுடன் அன்னதானம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் பூஜை நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.



சித்தி வஃபீலா வெளியிட்ட "முத்தமிழ் கலசம் இதழின் முதல் பிரதியை கொழும்பு 3. சசகா மண்டபத்தில் (16) காலையில் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் இதழாசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்வதையும், அருகில் மேமன் கவி, ராதா மேத்தா ஆகியோரையும் காணலாம்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 04ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 13

**குறள் தரும் சிந்தனை**

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது**

பகல் நேரமாக இருந்தால் கோட்டானைக் காக்கை வென்று விடும். எனவே எதிரியை வீழ்த்துவதற்கு ஏற்ற காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டில் விஷேட கவனம்

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முன்னணி துறைகளில் ஒன்றாக விளங்கும் பெருந்தோட்டத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் சமூக, பொருளாதார துறைகளில் பெரிதும் பின்னடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நாடு சுதந்திரமடைந்து 74 வருடங்களாகியுள்ள போதிலும் இம்மக்களுக்கு உரிய காணிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. அவர்களது பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியும் உரிய ஒழுங்கில் கிடைக்கப்பெறுவதில்லை. ஆனால் இம்மக்களின் சமூக, பொருளாதார, வாழ்வாதார நிலைமைகளை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் உண்டு. இதனை விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தான் உண்மையும் கூட. இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக அயராது உழைத்துவரும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டின் ஏனைய சமூகங்களைப் போன்று முன்னேற்றமடைவதற்கு தேவையான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவது அவசியம். இருந்த போதிலும் கடந்த கால அரசாங்கங்கள் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளன.

ஆனாலும் தற்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலம் முதல் மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்வாதார மேம்பாட்டில் விஷேட கவனம் செலுத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக மலையகப் பெருந்தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருதல், அவற்றை அபிவிருத்தி செய்தல், பெருந்தோட்ட வீதிகளை கார்ப்பெட் இட்டு அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அத்தோடு நில்லாமல் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 2019 நவம்பரில் பதவிக்கு வந்தது முதல் மலையகப் பெருந்தோட்ட மக்களின் நலன்களில் தொடர்ந்தும் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

அந்த வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நல்லாட்சிக் காலத்தில் ஆரம்பித்த ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கை பல வருடங்கள் நீடித்தும் கடந்த காலத்தில் அவ்விடயத்துக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இத்தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தன. இதன் நிமித்தம் தொழில் அமைச்சரின் ஊடாக விஷேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக பல வருடங்களாக நீடித்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளது. அதேநேரம் பெருந்தோட்டப் பிள்ளைகளை கல்வித் துறையில் மேம்படுத்தும் நோக்கில் அங்குள்ள பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் 2019 இறுதியில் தோற்றம் பெற்று பெரும் சவாலாக விளங்கி வரும் கொவிட்19 தொற்றினால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்க்கும் வகையில் 920 பில்லியன் ரூபா பெறுமதியான நிவாரண பொதித்திட்டத்தை அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அத்திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களும் கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதாவது பெருந்தோட்ட மக்களுக்கு கிலோவுக்கு ரூபா 80.00 வுக்கு கோதுமை மாவை மானிய விலையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணமாகும்.

இவ்வாறு இத்தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் மலையகப் பெருந்தோட்டப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட ஆயிரம் வீடுகளுக்கு தற்போது குடிநீர், மின்சாரம், வீதி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் கடந்த சனியன்று கொட்டகலையில் நடைபெற்ற வைபவத்தில் இளைஞர் விவகார, விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ்வீடுகளைப் பயனாளிகளிடம் கையளித்துள்ளார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் நாமல், பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக ஆற்றிவரும் பங்களிப்புகளைக் குறிப்பிட்டு பாராட்டியதோடு, மக்களின் துன்பங்களை நன்கறிந்துள்ள எமது அரசாங்கம் பெருந்தோட்ட மக்களுக்கு தொடர்ந்தும் உதவி ஒத்துழைப்புக்களை நல்கும்' என்றுள்ளார்.

ஆகவே பெருந்தோட்ட மக்களின் சமூக, பொருளாதார, வாழ்வாதார மேம்பாட்டின் நிமித்தம் அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதுவே அந்த மக்களின் நலன்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# 'நேத்ரா' தொலைக்காட்சியில் இன்று துருது நோன்மதி தின கலந்துரையாடல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா ரிவியில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ் மொழியில் ஒளிபரப்பாகி வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் துருது நோன்மதி தினம் புத்த பகவான் ஞானம் பெற்று 9 மாதங்களின் பின்னர் இலங்கைக்கு முதல் தடவையாக வருகை தந்த தினமாக இந்த தினம் அனுஸ்டிக்கப்படுகிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் ஒன்றை வழங்கும் நோக்கிலேயே, இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது. நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக நேத்ரா ரி.வியில் இடம்பெற்று வருகிறது. சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைவது இங்கு குறிப்பிடத்தக்கது.

2019 நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மத நல்லிணக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகஸ்ட் 5ம் திகதி இடம்பெற்ற பொது தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. அதன் பின்னர் மீளவும் பிரதமராக பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ், புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.



புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் இலங்கை ஜனநாயக சோஸலிஸ குடியரசின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகு நடையில் வழங்கும் போது நல்லிணக்கம் ஏற்படுகிறது. மேலும் மதங்கள் பற்றிய பல சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன.



நோன்மதி தினத்தின் வரலாற்று சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்சசீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்க்கை சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த பிக்கு மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் ஜனவரி மாதம் 17ஆம் திகதியான இன்று துருது நோன்மதி தின விசேட ஒளிபரப்பு இடம்பெறவுள்ளது. துருது நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு, பௌத்த தர்மம், புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை முந்தல், மங்கள எலிய, ஸ்ரீ தேவ்ராம் விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தம்ம அரவணடிகள் வழங்குவார் என்பதும் சிறப்பம்சமாகும்.

இன்றைய தினம் காலை 9 மணி முதல் 10.00 மணிவரை இந்த விசேட உரையாடல் இடம்பெற உள்ளது.

**ஜெயரஞ்ஜன் யோகராஜ்**
சிரேஸ்ட ஊடகவியலாளர், புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளர்

# ஒமிக்ரோன்: உண்மை என்ன?

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் திரிபால் வெளிப்படும் நோய் அறிகுறிகள் இலேசானதாகத் தோன்றுகிறது. அந்த பாதிப்புடன் மருத்துவமனையில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் இறப்பு விகிதமும் குறைவானதாகவே காணப்படுகின்றது. அதனால் ஒமிக்ரோன் வேகமாக பரவக்கூடிய தொற்றாக இருந்தாலும், கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் ஒமிக்ரோன் திரிபு ஒரு 'இயற்கையான தடுப்பு மருந்து' என சில நிபுணர்கள் நம்புகின்றனர்.


இருப்பினும், இதனை இந்திய மகாராஷ்டிரா கொரோனா தடுப்பு செயற்பாட்டமைப்பின் உறுப்பினரான மருத்துவரொருவர் மறுத்துள்ளார். 'இது இறந்த வைரஸும் பயன்படுத்தப்படுகிறது.

இது தொடர்பில் மகாராஷ்டிராவின் தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் பிரதீப் அவதே, 'ஒமிக்ரோன் கடுமையான நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனாலும், அதன் பரவும் திறன் மிகவும் தீவிரமானது. அதனால் அதிகமானோருக்கு இத்தொற்று ஏற்பட்டாலும் நோய் தீவிர நிலையில் இராது.

இருப்பினும் இத்தொற்று ஒவ்வொருவரது உடலை சென்றடைந்ததும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும். இதன் விளைவாகவே சில நிபுணர்கள் ஒமிக்ரோனை 'இயற்கையான மருந்து' என்கின்றனர்.

மகாராஷ்டிராவில் கொரோனா தொற்றின் மூன்றாவது அலைக்கு ஒமிக்ரோன் திரிபு முக்கிய காரணமாக விளங்குகின்றது. இது மரணம் விளைவிக்கும் டெல்டாவுக்கு மாற்றலாகி வருகிறது என்கிறார் அவர்.





**'ஒமிக்ரோனை, 'இயற்கை தடுப்பூசி' என்று அழைப்பது தவறு. ஒவ்வொரு தொற்றுக்கும் பக்க விளைவுகள் உண்டு. ஒமிக்ரோன் பாதிப்புடைய நோயாளர்கள் நீண்ட கால கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்படலாம்.**

**- மருத்துவ நிபுணர்**

ஒரு தவறான கருத்து. ஒமிக்ரோன் உயிராபத்து மிக்கது என்றுள்ளார் அவர்.

என்றாலும் ஒமிக்ரோனை 'இயற்கை தடுப்பு மருந்து' எனச் சிலர் கருதும் நிலைமை எவ்வாறு உருவானது என்பது கவனம் செலுத்துவது அவசியம்.

அதனால் இயற்கையான தடுப்பு மருந்து என்றால் என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது மிகவும் பலவீனமான நுண்ணுயிரிகள் அல்லது வைரஸ்கள் எந்தவொரு நோய்க்கும் எதிராக எதிர்ப்பு மருந்தாக உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன. சில தடுப்பு மருந்துகளில்

இதேவேளை மும்பையிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றின் பொது மருத்துவரொருவர், 'ஒமிக்ரோன் உண்மையில் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு 'இயற்கை தடுப்பு மருந்து'. அவ்வைரஸ் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. நோயாளர்களுக்கு அறிகுறிகளும் மிகக் குறைவு' என்கிறார் அவர்.

தற்போதைய சூழ்நிலையில் ஒமிக்ரோன் அலையில் நோயாளர்களுக்கு ஒட்சிசன் சிகிச்சை தேவையில்லை என்றும், வென்டிலேட்டர் தேவையில்லை என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பொதுமருத்துவர் கௌதம் பன்சாலி, 'டெல்டா நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின் தீவிரம் இந்த அலையில் பிரதிபலிக்கவில்லை. நோயாளர்களுக்கு இந்தியாவில் மருந்து தேவையில்லை. அதனால் இற்றை வரை கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில் ஒமிக்ரோனை இயற்கையான தடுப்பு மருந்து எனலாம் என்கிறார். இதேவேளை மருத்துவர் ஷஷாங்க் ஜோஷி, 'ஒமிக்ரோனை, 'இயற்கை தடுப்பூசி' என்று அழைப்பது தவறு. ஒவ்வொரு தொற்றுக்கும் பக்க விளைவுகள் உண்டு. ஒமிக்ரோன் பாதிப்புடைய நோயாளர்கள் நீண்ட கால கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்படலாம். அதன் விளைவுகள் இன்னும் அறியப்படவில்லை. ஒமிக்ரோனை ஒரு 'இயற்கை தடுப்பூசி' என்று கூறுவதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை' என்கிறார்.

ஆகவே ஒமிக்ரோன் திரிபின் நோய்த்தாக்கம் குறைவாகக் காணப்பட்டாலும் அதன் தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை உச்சளவில் பேணிக் கொள்ள வேண்டும். அத்தோடு கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவும் தவறக்கூடாது.

# அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு இன்று

## பாலமேடு ஜல்லிக்கட்டில் முதலாமிடம் பெற்றவருக்கு கார் பரிசு

மதுரை, பாலமேடு கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடாத்தப்பட்டுள்ளது. இதில் 21 காளைகளை பிடித்த பொதும்பு கிராமத்தைச் சேர்ந்த பிரபாகரன் முதலிடத்தை பெற்றதாக அறிவிக்கப்பட்டார். அவருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டது. இதேவேளை அவனியாபுரம், பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டிகளைத் தொடர்ந்து அடுத்த போட்டி இன்று 17ஆம் தேதி அலங்காநல்லூரில் நடைபெறவுள்ளது.

பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி, சனியன்று காலை 8 மணிக்கு தொடங்கியது. இப்போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. வாடிவாசலில் சீறிக் கொண்டு காளைகள் வருவதும் அவற்றைப் பிடிக்க மாடுபிடி வீரர்கள் களமாடியதும் நிமிடத்துக்கு நிமிடம் பரபரப்பை கூட்டிக் கொண்டே இருந்தன. தலா ஒரு மணி நேர சுற்றில் 30 வீரர்கள் என்கிற கணக்கில் மொத்தம் ஏழு சுற்றுகளாக போட்டி நடந்தன.



சனிக்கிழமை நடந்த போட்டியில் 729 காளைகள் பங்கெடுத்தன. மாலை 5 மணிக்கு போட்டி நிறைவடைந்தது. இதன் முடிவில் முதலிடம் பிடித்த வீரராக பொதும்பு கிராமத்தைச் சேர்ந்த பிரபாகரன் அறிவிக்கப்பட்டார். நான்காவது சுற்றில் களத்துக்கு வந்து 21 காளைகளை பிடித்தார். 2020, 2021ஆம் ஆண்டுகளிலும் இவர் முதலிரண்டு இடங்களை பிடித்திருந்தார். இப்போது மூன்றாவது முறையாக வென்ற இவருக்கு தமிழக முதல்வர் சார்பில் கார் பரிசு வழங்கப்பட்டது. சிவகங்கை புலியூரைச் சேர்ந்த சூறாவளி என்ற காளைக்கு, சிறந்த காளைக்கான முதல் பரிசு வழங்கப்பட்டது. அதன் உரிமையாளருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டது.

இரண்டாமிடம் பிடித்த மாடுபிடி வீரராக குருவித்துறையைச் சேர்ந்த கார்த்திக் ராஜா அறிவிக்கப்பட்டார். இவர் 11 மாடுகளை பிடித்துள்ளார். இவருக்கு திருவல்லிக்கேணி எம்.எல்.ஏ உதயநிதி ஸ்டாலின் சார்பில் இரு சக்கர வாகனம் பரிசாக வழங்கப்பட்டது.

மூன்றாம் இடம் பிடித்த வீரராக மேட்டுப்பட்டியைச் சேர்ந்த கார்த்திக் ராஜா தேர்வானார்.

# தைப்பூசம்

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் சிறப்பு வழிப்பாட்டிற்குரிய புனித விரத தினமாகும். இது தமிழர்கள் பெரும்பாலும் வாழும் நாடுகளில் முருகப்பெருமானுக்காக கொண்டாடப்படும் ஒரு பெரும் புனித விழாவாகும். தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர். தைப்பூசம் ஆண்டு தோறும் தை மாதம் தமிழ் பஞ்சாங்கப்படி வரும் பத்தாவது மாதமாகும்.



இது பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடி நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகும். சில வருடங்களில் பௌர்ணமியானது பூச நட்சத்திரத்திற்கு முன்னும் பின்னும் வரும் தினங்களும் உண்டு. நட்சத்திர வரிசையில் பூசம் எட்டாவது நட்சத்திரமாகும். இவ்விழா முழு நிலவு பூச நட்சத்திரத்திற்கு வரும்நேரம் நடத்தப்படுகிறது.

தைப்பூச திருவிழாவானது தமிழ்நாடு, இலங்கைத், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா,மொரீசியஸ் போன்ற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் வெகு விமரிசையாக அனுஷ்டிக்கப்படும் விழாவாகும்.இவ் வருடம் தைப்பூசத் திருநாள் நாளை செவ்வாய்க்கிழமை 18.01.2022 அன்று பௌர்ணமிக்கு மறுதினமான பிரதமைத் திதியில் தோன்றுகின்றது.

தைப்பூசம் விழாவானது பழங்காலந்தொட்டே தமிழகத்தின் முருகன், சிவன் கோயில்களில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு தைப்பூசம் கொண்டாடப்பட்டது குறித்து தேவாரப் பதிகங்களில் குறிப்புகள் உள்ளன. குறிப்பாக பொருந்திய "தைப்பூச மாடி உலகம் பொலிவெய்த"

என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

பிற்கால சோழர் ஆட்சியில் தைப்பூசத்தன்று கோயில்களில் கூத்துகள் நடத்தபட்டன. குறிப்பாக திருவிடைமருதூர் மகாலிங்கேஷ்வரர் கோயிலில் தைப்பூசதை ஒட்டி நான்கு நாட்கள் கூத்துகள் நடத்ததாக சோழர் கால கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

தைப்பூசத்தன்று தான் உலகம் தோன்றியதாக ஓர் வரலாற்று ஐதீகமும் உண்டு.

முருகன் தமிழ்க்கடவுள் ஆவார். முருகன் என்றால் அழகு என்று பொருள். முருகன் தேவசேனாதிபதி (தேவர்களின் சேனாதிபதி) ஆகையால் இவர் ஒரு போர்க்கடவுள் ஆவார். தைப்பூசத்தன்று முருகன் தரரகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு விழாவாக பழனியில்

அனுஷ்டிக்கப்படுகிறது. சிவபெருமான் உமாதேவியுடனிருந்து சிதம்பரத்தில் ஆனந்தத் திருநடனம் ஆடி, தரிசனம் அளித்த நன்நாள் தைப்பூசம் என தில்லை வாழ் அந்தணர் புராணம் கூறுகின்றது.

சிதம்பரத்திற்கு வந்து அரும்பெரும் திருப்பணிகள் செய்து, தில்லை நடராஜரை இரண்யவர்மன் எனும் மன்னன் நேருக்கு நேராகத் தரிசித்ததும் ஓர் தைப்பூச நன்நாளிலே ஆகும். இக்காரணங்களுக்காகவே சிவன் கோயில்களில் தைப்பூசத்தன்று சிறப்பு அபிஷேகங்களுடன் பூஜைகள் நடாத்தப்படுகின்றன. தேவர்களில் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குருவழிபாடு செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பர்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை பூச நட்சத்திரத்தன்று தான் ஒளியானார். இதனைக் குறிக்கும் விதமாக அவர் ஒளியான வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில், தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை





பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நவகம்புர சங்கத்தமிழ் இந்து மன்றம் நடத்திய கோலப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

## ஹோமம் நடத்தும் போது குண்டத்தில் போட்ட நாணயங்களை வீட்டில் வைத்திருந்தால் நல்லது என்று சொல்கிறார்களே?

ஹோமம் முடிந்து அதில் போட்ட எல்லா திரவியங்களும் சாம்பலாகும் வரை குண்டத்திலிருந்து எதையும் எடுக்கக்கூடாது. சில இடங்களில் ஹோமம் முடிந்து, யாகசாலைகளில் இருந்து கடம் புறப்பட்டவுடனேயே மக்கள் உள்ளே புகுந்து குண்டங்களை அணைத்தும், கலைத்தும் நாணயங்களையும் சாம்பல் பிரசாதமும் எடுக்கிறார்கள். இது மிகவும் பாவம். எல்லாம் சாம்பலான பிறகு நாணயங்களையும், சாம்பல் விபூதி பிரசாதத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இதை வீட்டில் வைத்துக் கொண்டால் லட்சுமி கடாட்சம் பெறுவதுடன், நோய் நொடியும் வராது.

## நாதப் பிரம்ம சாதனை - 02



தற்போதைய கண்டுபிடிப்புகளின் படி அணுத்துணிக்கைகள் ஒருவித நீள்வட்டப் பாதை சுழற்சியில் இருந்துகொண்டு சுயமாக உருவாகிய சக்திப் புலத்தினால் மிக நுண்ணிய துணிக்கைகள் அதிர்ந்துகொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது. சுயமாக இயங்கும் இந்த சக்திப் புலம் ஹிக் போஸன் சக்திப் புலம் எனப்படுகிறது. இந்த சக்திப்புலம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிவியல் இன்னும் கண்டு பிடிக்க முடியாததால் இவை சுய இருப்பு உடைய சக்திப் புலங்கள் என்று அறிவியல் கூறுகிறது. இதனால் இவை கடவுள் துணிக்கைகள் என்று இவை அழைக்கப்படுகின்றன.

இந்த ஆற்றலின் மூலமும், இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும் இந்திய தத்துவ ஞானத்தால் 'நாதம்' என்று அழைக்கப்படுகிறது. இந்த நாத சக்தி எங்கும் நிறைந்ததும் இயற்கையின் மையமானதும், நுண்ணியதுமாக இருந்து கொண்டு எல்லா சக்திகள், அதிர்வுகள், அசைவுகளுக்கும் மூலமாக இருக்கிறது. இயற்கையை ஆழமாக ஆராய்ந்த அறிஞர்கள் மிக நுண்ணிய சப்தம் ஓங்காரமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த ஓங்கார நாதம் சுயமாக வெளிப்பட்ட எங்கும் நிறைந்த, நித்தியமான உணர்வு சக்தியான பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட பரிணாம அதிர்வாகும்.

கடிகாரத்தில் உள்ள ஊசலை அலையவிட்டால் அது தொடர்ச்சியாக கடிகாரத்தை நாமாக நிறுத்தும் வரை அசைந்துகொண்டிருக்கும் என்பதை நாமறிவோம். இதைப் போன்று பிரபஞ்சத்தில் இருக்கும் நுண்ணிய துணிக்கைகள் ஓங்காரம் எனும் நாதத்தினால் தூண்டப்பட்டு அசைந்துகொண்டிருக்கின்றன. இயற்கையின் சுழற்சி எப்படி ஒரு விளையாட்டு ஊசல் சுழன்றுகொண்டு இருக்கிறதோ அப்படி சுழன்று கொண்டு இருக்கிறது. இந்த விளையாட்டு ஊசலின் இயக்க சக்தி சிறிது காலத்தில் தேய்ந்து விடும் ஆனால் நித்தியமான பரிணாம சக்தியான பிரம்மத்தின் இயக்க சக்தி எப்போதும் தேய்மானம் அடையாமல் நிரந்தரமாக இருக்கிறது.

சப்த சுரங்கள் என்பவை ஓங்காரத்தின் ஏழு வித்தியாசமான அதிர்வுகளாகும். இந்திய இசையினை பாரம்பரிய இசை, மெல்லிசை என இரண்டு விதமாக பிரிக்கலாம். பாரம்பரிய இசையின் அமைப்பினை சுரம், பதம், லயம், மார்க்கம் என நான்கு பகுதிகளுடையதாக பிரிக்கலாம். சுரம் இல்லாத பாடல்கள் அபிதான வான எனப்படும். இவை அபிவாதனம் உரையாடல் செய்யும் போது பாவிக்கும் கோர்வையான சொற்களைக் குறிக்கும்.

ஓங்காரம் என்ற மூல நாதம் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அதிர்வு சக்திகளினதும் தொகுப்பாகும். இதுவே அனைத்து இசைச் சுரங்களிற்கும் மூலமாகும். எப்படி சூரியனிலிருந்து ஏழு நிறங்கள் வெளிப்படுகிறதோ அதைப்போல் ஓங்காரத்திலிருந்து சப்த ஸ்வரங்கள் வெளிப்படுகிறது. இந்த இசைச் சுரங்கள் ஸ, ரி, க, ம, ப, த, நி என ஏழாக வெளிப்படுகின்றன. **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

# சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### கணம்புல்ல நாயனார்



56

இப்படி யொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட, கணம்புல்லுக்களை அரிந்துகொண்டுவந்து விற்று, நெய் வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் அவருக்குக் கணம்புல்லநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.


ஒருநாள் தாம் அரிந்து கொண்டு வந்த புல்லு விலைப்படா இருக்க, தம்முடைய பணி தவறாமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித்தற்கு அப்புல்லுப் போதாமையால், அடுத்த விளக்கிலே தம்முடைய திருமுடியை மடுத்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய்தருள, கணம்புல்லநாயனார் சிவலோகத்தை அடைந்தார்.



உச்சிட்ட நீரால் அபிஷேகித்தல் உச்சிட்ட உணவால் நைவேத்தியஞ் செய்தல் முதலிய அநாசார விதிகளாற் பூசை செய்து முத்திப் பேரின்பமுற்ற கண்ணப்ப நாயனார், மென்மலரால் அர்ச்சிக்கற்பாலதாகிய சிவலிங்கத் திருமேனியை வன்மலராகிய கன்மலரால் அர்ச்சித்து முத்தி பெற்ற சாக்கிய நாயனார், திருவிளக்குத் தகழியை உடலுதிரத்தால் நிரப்பித் திருவிளக்கேற்ற முயன்று சிவன் கருணைக்காளாகிப் பேரின்ப நிலையுற்ற முதலானோரின் வரலாறுகளினால் அது புலனாகும். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*18830)* வீட்டு பூஜையில் கற்பூர தீபத்தை அணைக்கலாமா?
**கூடாது. தானே குளிர்ந்து விட விடுவது தான் நல்லது.**

*18831)* ஏற்றிய விளக்கில் இருந்து கற்பூரத்தையோ ஊதுபத்தியையோ ஏற்றலாமா? **கூடாது.**

*18832)* விளக்கேற்றும் போது மற்றவர்கள் ஏற்றிவைத்த விளக்கின் மூலமாக நம் விளக்கைஏற்றலாமா? **கூடாது. தீப்பெட்டி மூலமாக தான் விளக்கேற்ற வேண்டும்.**

*18833)* சனி பகவானுக்கு வீட்டில் எள்விளக்கு ஏற்றலாமா?
**கூடாது.**

*18834)* காலை, மாலை வேளைகளில் யாராவது தூங்கிக் கொண்டிருக்கும் போது விளக்கேற்றலாமா?
**கூடாது. தூங்குபவர்கள் எழுந்த பிறகுதான் விளக்கேற்ற வேண்டும்.**

*18835)* தூங்குபவர்களின் தலைக்கு நேராக தேங்காய்உடைக்கலாமா?
**கூடாது.**

*18836)* பூஜையின்போது விபூதியை நீரில் குழைத்து பூசலாமா?
**கூடாது.**

*18837)* யார் விபூதியை நீரில் குழைத்துபூசலாம்?
**தீட்சை பெற்றவர்கள் மட்டுமே பூசலாம்.**


*18838)* வாஸ்து சாஸ்திரத்தை ஆன்மிகம் ஏற்றுக் கொள்கிறதா?
சாஸ்திரம் என்று சொல்லிவிட்டாலே அது ஆன்மிகம் தானே. இறைவழிபாட்டிற்காக கூறப்பட்டுள்ள சாஸ்திரங்களில் ஒரு பிரிவு – சிற்பசாஸ்திரம். இதன் உட்பிரிவுகளில் ஒன்று வாஸ்து சாஸ்திரம். ஒருவீட்டைக் கட்டத் துவங்குவதற்கு முன் வாஸ்து சாஸ்திரத்தைக் கடைபிடிக்கலாம். கட்டி முடித்தபின் வீண் வதந்திகளை நம்பி குழப்பிக் கொண்டு வீட்டை இடிக்க வேண்டாம்.

*18839)* வீட்டில் சிலை வைத்து வழிபாடு செய்து வருகிறேன். அதனால் குறை ஏதுமில்லை. ஆனால், சிலை வழிபாடு கூடாது என்று சிலர் கூறுகின்றனர்?
**வீட்டில் சாமி சிலைகளை ஆறு அங்குல உயரத்திற்கு மேல் இல்லாமல் வைத்து தாராளமாக பூஜை செய்யலாம்.**





கொழும்பு ஆமர் வீதி, பரடைஸ் பிளேஸ் ஸ்ரீ மகா காளியம்மன் திருக்கோயில் வருடாந்த திருவிழாவின் போது முத்தேர் உற்சவம் (16.01.2022 ) இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)



உடப்பு குறூப் நிருபர் உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவ உற்சவத்தில் வியாழக்கிழமை (13)இரதோற்சவம் இடம் பெற்றது.இதில் பலர் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.

விமான சேவைகள் நிறுவனத்திற்கு;

# பொருட்கள் போக்குவரத்து மூலம் கடந்த மாதத்தில் 10 மில்லியன் அமெரிக்கன் டொலர் வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா சூழ்நிலையின் பின்னர் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கடந்த டிசம்பர் மாதத்தில் 10 மில்லியன் அமெரிக்கன் டொலர் வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

விமானத்தில் பொருட்கள் போக்குவரத்து மற்றும் விமான நிலைய செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் இந்த வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதாக விமான சேவைகள் நிறுவன சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜனத விஜயபதிரண தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் மக்கள் போக்குவரத்துப் பிரிவு நட்டத்தை எதிர்கொண்டுள்ள போதும் மேற்படி நடவடிக்கைகள் மூலம் இலாபம் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் சூழ்நிலையில் பயணிகள் போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் அதனால் கிடைக்கும் வருமானம் குறைந்துள்ள போதும் பொருட்கள் போக்குவரத்து அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதன் மூலமான வருமானம் கிடைத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## கெப்பித்திகொள்ளாவயில் பஸ்-டிப்பர் மோதி விபத்து; 11 பேர் காயம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

வவுனியா கெப்பித்திகொள்ளாவ ஏ 22 பிரதான வீதியின் கெலே புளியன்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த 11 ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கெப்பித்திகொள்ளாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் (14) மாலை 5.45 மணியளவில் கெப்பித்திகொள்ளாவ கெலேபுளியன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

காயமடைந்தவர்களில் ஒன்பது பெண் ஊழியர்களும் பஸ் வண்டியின் சாரதி உட்பட மூன்று ஆண்களும் அடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் இரு பெண் ஊழியர்கள் பலத்த காயமடைந்துள்ளதுடன் ஏனையவர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வவுனியா பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமைபுரியும் ஊழியர்களை தமது சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்ற போது இரண்டு பஸ் வண்டிகளுடன் டிப்பர் வண்டியொன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்த ஊழியர்களை கெலே புளியன்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்திகொள்ளாவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரமுகர் முனையத்தை பயன்படுத்த பொதுமக்களுக்கு அனுமதியில்லை



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பிரமுகர்களுடன் பயணிக்கும் முனையத்தினூடாக சாதாரண மக்கள் இனி பயணிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகளின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இனிமேல், அனுமதி பெற்ற பிரமுகர்கள் மட்டுமே இந்த முனையத்தில் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அவர்களுடன் பயணம் செய்யும் நண்பர்கள் உட்பட சாதாரண மக்கள் அந்த வளாகத்தின் வழியாக செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். விமான நிலையத்தில் விமானம் நிறுத்தும் இடத்திற்கு சென்று விருந்தினர்களை வரவேற்பதாக இருந்தால் விமான நிலையத் தலைவர், பிரதித் தலைவர் அல்லது முகாமையாளரின் அனுமதி பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### மாலைதீவு சபாநாயகர்...

நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் சபாநாயகர் உட்பட முக்கிய அமைச்சர்களை சந்திக்க உள்ளனர்.

இக் குழுவினர் எதிர்வரும் புதன்கிழமை நாடு திரும்புவர்.

### வாகனங்கள், காணிகள்...

பெருமளவு அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் அந்த அமைச்சுக்கள், நிறுவனங்களுக்குரிய வாகனங்களுக்கு மேலதிகமாக பெருமளவு வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரச நிறுவனங்களுக்கு சொந்தமான பெருமளவு காணிகளில் சட்டபூர்வமற்ற விதத்தில் பலர் வசித்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், இந்த அனைத்து தகவல்கள் மற்றும் அதற்காக செலவிடப்படும் செலவுகள் தொடர்பிலும் தகவல்களை பெற்றுக்கொடுக்குமாறும் அவர்அரச நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ)

### அத்தியாவசிய பொருட்கள்...

அதற்கு மேலதிகமாக எரிபொருள் கொள்வனவுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளவுள்ளமை தொடர்பிலான முன்னேற்றம் சம்பந்தமாகவும் இந்தப் பேச்சுவார்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

### 13 ஐ எதிர்ப்போர் மாற்று...

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இம்மாத இறுதியில் அரசியல் போராட்டத்தை அறிவித்துள்ளார்.

உண்மையில் அவரது கட்சி நிலைப்பாட்டின் படி இது மிக சரியான முடிவாகும்.'13 மற்றும் மாகாண சபைகள் வேண்டாம்' என்றால் மாற்றுப் பயணம் இருக்க வேண்டும்.

2005 முதல் 2009 வரை இறுதிப் போர் காலத்தில் கொழும்பில் வந்து அடைக்கலம் புகுந்த வடக்கு, கிழக்கு உடன் பிறப்புகளுக்காக நானும், எனது கட்சியும், நான் உருவாகிய 'மக்கள் கண்காணிப்பு குழு' என்ற மனித உரிமை இயக்கமும் வீதி போராட்டங்களை உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நடத்திப் போராடினோம்.

மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்து, அங்கிருந்த படி நான் அறிக்கை அரசியல் செய்யவில்லை. இது இங்கே சிங்கத்தின் குகையில் இருந்தபடி நான் நடத்திய என் நேர்மையான அறப் போராட்ட வரலாறு.

ஆகவே, '13 என்பது முதல் படி கூட கிடையாது. அதை தீண்டவும் மாட்டோம்.

அதற்கு அப்பால் போயே தீருவோம்' என்பவர்கள் மாற்று போராட்ட பயணத்தை முன்னெடுக்க வேண்டும்.13 இற்கு அப்பால் செல்லும் அந்த மாற்றுப் பயணம் ஊடக சந்திப்புகளுக்கு அப்பால் செல்ல வேண்டும். ஊடகங்களைச் சந்தித்து, 'அமெரிக்காவில் இருந்து இந்திரன் கொண்டு வருகின்றான்.

ஆபிரிக்காவில் இருந்து சந்திரன் கொண்டு வருகிறான்' என்று அறிக்கை இடுவதெல்லாம் போராட்டம் அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### அனைத்து வாக்குறுதிகளும்...

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தாம் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விவசாயிகளை பலப்படுத்தும் வகையில் 95 ரூபாய்க்கேனும் நெல்லை கொள்வனவு செய்யுமாறு நான் விவசாயத் துறை அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அதேவேளை, ஊடகங்களுடன் போட்டி கிடையாது என்றும் அபிவிருத்தியின் பங்காளிகளாக இணைந்து செயற்படுமாறு தாம் ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பு _ கண்டி நகரங்களை இணைக்கும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம முதல் குருநாகல் வரையிலான நெடுஞ்சாலை பகுதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மக்கள் உபயோகத்திற்காக திறந்து வைக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

பொய்ப்பிரசாரங்களினால் மனம் தளர்ந்து விடாமல் நாட்டு மக்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு நாட்டின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய ஜனாதிபதி நாட்டைக்கட்டியெழுப்பவே நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம். பொய்ப்பிரசாரங்களினால் மனம் தளர்ந்துவிடாமல், நாட்டு மக்களின் நலனுக்காக ஒன்றிணைந்துச் செயற்படவருமாறு, அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும், ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச;

இன்றைய உலகம் மற்றும் சமூகம் என்பன மிகவும் வேகமானவை. எனவே காலத்தை உச்ச அளவில் உபயோகப்படுத்திக் கொள்ள சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பு அவசியமாகிறது.

உலகில் அபிவிருத்தியடைந்ததாகக் கருதப்படும் நாடுகளின் முன்னேற்றத்திற்கு முறையான போக்குவரத்து முறைமைகளே காரணமாகியுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் அளவுக்கு விமர்சிக்கப்படும் வேறு ஒரு திட்டம் இந்த நாட்டில் கிடையாது. விமர்சித்துக் கொண்டே அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பவர்களின் விமர்சனங்களுக்கு வார்த்தைகளால் பதில் அளிப்பதை விட செயல்களினால் பதிலளிப்பது அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கண்டி அதிவேக நெடுஞ்சாலையானது மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

### பொரளை தேவாலய....

கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது தேசிய பாதுகாப்பு வீழ்ந்துள்ளதென்று கூறுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் தேசிய பாதுகாப்பு என்பது முற்றிலும் விசாலமானது இதுபோன்ற சம்பவங்களை ஆங்காங்கே நடத்துவதற்கு சிலர் முயற்சிக்கலாம் அவ்வாறான ஒரு சிலர் முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக முறியடித்தே தீருவோம்.

நாட்டு மக்கள் இந்த சம்பவம் தொடர்பில் வீணான அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று நான் வேண்டிக் கொள்ள விரும்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டிக்கு விஜயம் செய்த பாதுகாப்புச் செயலாளர் அஸ்கிரிய மற்றும் மல்வத்து தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் மேலும் கருத்து தெரிவிக்கையில் :

சம்பவம் ஒன்று இடம்பெற்று 24 மணி நேரத்துக்குள் அந்த சம்பவம் தொடர்பில் விமர்சிப்பதென்பது சாதாரணமானதென நான் நினைக்கவில்லை.

விசாரணையொன்று நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல அதனை நினைத்தவாறு 24 மணி நேரத்துக்குள் முடிக்கவும் முடியாது. விசாரணை நடத்தப்படும்போது பல்வேறு கோணங்களில் பார்க்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அந்த விசாரணைகள் மூலம் உடனடியாக தெரிந்து கொள்ள கூடிய விடயங்கள் உள்ளன. மேலும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

எனவே எந்த ஒரு விசாரணைகள் தொடர்பிலும் ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படுமென நான் நினைக்கின்றேன். இதற்காக பல மாதங்கள் எடுக்கவேண்டும் என்று நான் கூறவில்லை குறைந்தபட்சம் சில நாட்களாவது தேவைப்படும் என்று நான் நினைக்கின்றேன்.

எனவே இது அன் சம்பவமொன்று நடைபெற்று அது தொடர்பான விசாரணைகள் முடிவு பெறுவதற்கு முன்னர் அந்த விசாரணை தொடர்பில் விமர்சிப்பது என்பது நியாயமில்லை.

தேவாலயங்கள், விகாரைகள் உள்ளிட்ட அனைத்து மத தலங்களில் பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம்.

சம்பவத்தில் மேற்படி தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அந்த கைக்குண்டை அங்கு வைத்த சந்தேக நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் பிரதிபலனாக இன்னும் பலர் விசாரணைகளுக்காக கைது செய்யப்படவுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் பல்வேறு கோணங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சகல சந்தேகநபர்களும் சட்டத்திற்கு முன் கண்டிப்பாக நிறுத்தப்படுவார்கள் என்று நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் என்னால் உறுதிமொழி வழங்க முடியும் என்றார்.

குற்றவாளிகளை பாதுகாக்க முயற்சிப்பதாகவும் அதனால் சி சி ரீ வி சரியான நடவடிக்கை எடுக்க ப்படவில்லையென பேராயர் கர்தினால் குற்றம்சாட்டியுள்ளார் இது தொடர்பில் என்ன கூற விரும்புகிறீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் :

பேராயர் கர்தினால், எதனைக் கூறினாலும் அவர் கூறுவதை விட பல கோணங்களில் சிந்தித்து உரிய விசாரணைகளை தேவைக்கேற்ப மேற்கொள்வதற்கு தேவையான சகல திறமைகளும் சிஐடியினருக்கும் போலிஸாருக்கும் இருக்கின்றது.சட்டம் தெரிந்த விசாரணைகள் தொடர்பில் நன்கு தெரிந்த இதற்கு முன்னர் பல விசாரணைகளை மேற்கொண்ட இவ்வாறான விசாரணைகள் தொடர்பில் அனுபவமுள்ள அதிகாரிகளே இந்த விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் எனவே அவர்களது விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் நாம் இடமளிக்க வேண்டும்.

எனவே இந்த விடயத்தில் நாங்கள் அவசரப்பட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

### 30 நாட்களுக்குள்... (03ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதனால்தான் அவரை விமர்சிக்கிறார்கள். நீங்கள் சவாலாக இருப்பதால் உள்ளே இருந்தும் வெளியில் இருந்தும் விமர்சிக்கிறார்கள். இது ஒன்றும் நமக்குப் புதிதல்ல.

யார் விமர்சித்தாலும் இன்றும் என்றும் உங்களை நாம் பாதுகாப்போம். நிபந்தனையற்ற ஆதரவை உங்களுக்கு வழங்குவோம் என்றார். (பா)

### வகுப்புகள் கருத்தரங்குகள் ... (03ஆம் பக்கம் பார்க்க)

திகதி வரை நடைபெறவுள்ளதுடன் 2438 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ)

### இரண்டரை கோடி ரூபா... (03ஆம் பக்கம் பார்க்க)

மேலதிக பரிசோதனைக்காக மேற்படி போதை மாத்திரைகளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

### ஒமிக்ரோன் முதன்மை....

ஒமிக்ரோன் வைரலை தற்போது குறிப்பிடமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுநோயாளர்களில் பெரும்பாலானோர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்வதற்காக வந்திருந்தவர்கள் என்றும் அவர்கள் கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கிணங்க நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

### நாட்டின் பொருளாதாரம் ....

பெற்றுக்கொண்டுள்ளதையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதேவேளை நாட்டில் டொலருக்கான தட்டுப்பாடு தொடரும் நிலையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக சுமார் 1700 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக கூறப்படும் தகவல்கள் தொடர்பில் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுனர்:

1700 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக யார் கூறியது? யார் அங்கு சென்று அவற்றைப் பார்த்தது? அது தொடர்பான பட்டியல் உள்ளதா? என கேள்வியெழுப்பியுள்ள அவர் இந்தப் பிரச்சினைக்கு எம்மால் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

### மத்திய நெடுஞ்சாலை;...

பெருந்திரளான வாகனங்கள் இதில் பயணித்ததாக அறிய வருகிறது. நேற்று (16) நண்பகல் 12 மணி வரையில் குறித்த வீதியில் கட்டணம் எதுவும் அறவிடப்படாததோடு குறித்த அதிவேக வீதியைப் பயன்படுத்தும்போது அறவிடப்படும் கட்டணங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய சிறிய வாகனங்கள் இரண்டு பரிமாற்று நிலையங்களுக்கு இடையில் பயணிக்கும் போது 100 ரூபாவும், பெரிய வாகனங்கள் பயணிக்கும்போது 150 ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர மீரிகம முதல் குருநாகல் வரையில் பயணிக்கும் சிறிய வாகனங்களுக்கு 250 ரூபா கட்டணம் அறவிடப்படும் அதேவேளை பெரிய ரக வாகனங்களுக்கு 350 ரூபா முதல் 550 ரூபா வரை அறிவிடப்படும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வங்கிகளுக்கு டொலர் ...

பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கோதுமை மாவின் விலை வெகுவாக அதிகரித்துள்ள காரணத்தினால் பேக்கரி தொழில்களில் ஈடுபட்டு வருவோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அதனால் பேக்கரி உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பாதிப்பும் பேக்கரிகளில் பணிபுரிவோரும் தொழில்வாய்ப்புக்களை இழக்கும் மோசமான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சீமெந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் நிர்மாணத்துறைக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் நிர்மாணத்துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ)

### 4 மணி நேரம்...

எண்ணெய், மின்சார சபையின் களஞ்சியசாலையில் உள்ளது.இதன் படி, மூன்று நாட்களின் பின்னர் இலங்கை மின்சார சபைக்கு, மின் வெட்டை நடைமுறைப்படுத்தி, மின்சார கேள்வியை குறைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனை முன்னெடுக்கவில்லை என்றால், மின்சார கட்டமைப்பின் சமநிலைமையை தொடர்ந்தும் பேண முடியாது.நீர் மின் உற்பத்தி நடவடிக்கையின் போது, விவசாயம், குடிநீர் மற்றும் சூழல் ஆகியவற்றை கருத்திற் கொண்டு, நீர் முகாமைத்துவம் செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. அதனால் நீர் மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பபட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களின் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் புதிய மின் உற்பத்தி திட்டங்களை இரத்து செய்தல் ஆகிய காரணங்களினாலும் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மின்வெட்டு நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பங்களில், மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வர மாற்று மின் உற்பத்தி நிலையங்கள் நாட்டிற்குள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### சந்திரிகா, முன்னாள்...

நாட்டுக்கு தேவைப்படுகிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் எமது புதிய கட்சி உதயமாகிறது.

இந்தக் கட்சியின் போசகராகவும் எம்மை வழிநடத்துபவராகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க செயற்படவுள்ளார். இந்த நிகழ்விற்கு அனைத்து தலைவர்களையும் அழைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

எமது கொள்கைகளையும், இலக்குகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் எம்முடன் இணைந்து பயணிப்பதற்கு முடியும். அவ்விதமானவர்களுக்காக எமது கதவுகள் திறந்தே இருக்கும்.அண்மையில் சுசில் பிரேமஜயந்தவுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். ஏனைய தலைவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதில் எமக்கு தயக்கங்கள் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தின் பங்காளியாக இருக்கின்றார். அவர் அதிலிருந்து வெளியேறி எம்முடன் இணைந்து கொள்வது பற்றி தீர்மானித்தால் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

### மின்சார சபை பெற்றோலியக்...

மெற்றிக் தொன் எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிலையில் மின் துண்டிப்பு மேற்கொள்வதற்கான அவசியம் ஏற்படாது என நினைக்கின்றேன்.

எமக்கு 3,000 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திற்காக கிடைத்துள்ளது. அதற்கிணங்க நாளை 18ஆம் திகதி வரை மின் துண்டிப்பு இல்லாமல் தொடர்ச்சியாக எம்மால் நாட்டு மக்களுக்கு மின்சாரத்தை வழங்க முடியும். இன்றைய தினம் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பிலவுடன் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

இதன்போது எதிர்வரும் 25ஆம் திகதி வரைக்குமான எரிபொருளை பெற்றுத்தருமாறு நாம்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வேண்டுகோள் விடுப்போம்.ஒரு வருடத்திற்கு மின்சார சபைக்கு தேவையான எரிபொருளின் அளவு தொடர்பில் நாம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்துள்ளோம்அதற்கிணங்க இன்றைய தினம் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

# கிழக்கின் குரல்



## காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் விஜயம்

### புதிய மருந்து களஞ்சியசாலை திறந்து வைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேலகுணவர்த்தன ஞாயிற்றுக்கிழமை (16) காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். இதன் போது காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மருந்துக் களஞ்சியசாலையை திறந்து வைத்ததுடன் அதனை பார்வையிட்டார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தனவை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் வரவேற்றனர்.

இந் நிகழ்வு காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். மயூரன் உட்பட காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேலகுணவர்த்தன மற்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் ஆகியோருக்கு வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.





கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயற்பட்ட வைத்தியாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் ஊழியர்களுக்கும் இதன் போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நவீனமயமான மருந்துக் களஞ்சியசாலை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சிறந்த சிகிச்சையையும் இவ் வைத்தியசாலை வழங்கி வருகின்றது. இதனால் இவ் வைத்தியசாலை தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பல விருதுகளை பெற்றிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

மட்டக்களப்புக்கு மூன்று தடவைகள் நான் வந்துள்ளேன். காத்தான்குடிக்கு விஜயம் செய்தது இது முதல் தடவையாகும். காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கு வருகை தந்தேன்.

ஒமிக்ரோன் தொற்றிலிருந்தும் நாம் பாதுகாக்க வேண்டும். அதற்காகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதன் போது தெரிவித்தார்.

## அறநெறி பாடசாலையில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு அம்மன் அறநெறி பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்ற பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்த தினம் ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டன.

அம்மன் அறநெறி பாடசாலை அதிபர் தி.நாகநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஆன்மீக அதிதியாக புதுக்குடியிருப்ப ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கோ.கிரிதரக்குருக்கள் கலந்து கொண்டார்.

இங்கு பொங்கல் பொங்கி கொண்டாடப்பட்டதுடன், சிவஸ்ரீ கோ.கிரிதரக்குருக்களினால் மாணவர்களுக்கு நல் ஆசியும், சிறப்பு பூசை வழிபாடுகளும் நடைபெற்றன. அத்துடன் திருவள்ளுவரின் பிறந்த தினத்தையொட்டி திருவள்ளுவர் சிறப்பு பேச்சு மற்றும் பொங்கல் தினம் பற்றிய பேச்சு ஆகியனவும் நடைபெற்றன.

தமிழர்கள் நான்கு வகையான பொங்கலை கொண்டாடி மகிழ்கின்றனர். தைப்பொங்கலுக்கு முதல் நாள் போகிப் பொங்கல், அடுத்தநாள் தைப்பொங்கல், மறுநாள் பட்டிப்பொங்கல், அதற்கு அடுத்த நாள் காணும் பொங்கல் என பொங்கலைப் பொங்கி மகிழ்கின்றனர். இதற்கமைய இன்றைய தினம் அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் காணும் பொங்கலை பொங்கி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.



## கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொவிட்

**(ரொட்டவெவ குறுப் நிருபர்)**

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக 13 மாணவர்கள் கொரோனா தொற்று காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், இருமல் காரணமாக சனிக்கிழமை (15) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த போது, மேற்கொள்ளப்பட்ட அண்டிஜன் பரிசோதனையின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அங்கு சில மாணவர்களுக்கு கொரோனா தொற்று பரிசோதனை செய்யப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும் திருகோணமலையில் தொற்று பரவி வருவதால் கடுமையாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறும் சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

## வாழைச்சேனை வைத்தியசாலையில் எக்ஸ்ரே பிரிவு திறந்து வைப்பு

**கல்குடா தினகரன் நிருபர்**



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன ஞாயிற்றுக்கிழமை (16) திறந்து வைக்கப்பட்டது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி. தயாழினி சசிகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

மேலும் அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் கொரோனா சிகிச்சை நிலையம், தீவிர சிகிச்சை பிரிவு, மனநோயாளர்கள் சிகிச்சை பிரிவு என்பவற்றினை சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன பார்வையிட்டார். வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன மலேசியா அலகா பௌண்டேசன், எமது சமூகம் நிறுவனம், அவுஸ்திரேலியா மெடிக்கல் எய்ட் பௌண்டேசன் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் திறந்து வைக்கப்பட்டதாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி. தயாழினி சசிகுமார் தெரிவித்தார்.

## சம்பூரில் காளைகளை அடக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு

**தோப்பூர் குறுப் நிருபர்**



தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளில் ஒன்றான காளைகளை அடக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு சம்பூர் விளையாட்டு மைதானத்தில் பட்டிப் பொங்கல் தினமான சனிக்கிழமை (15) இடம் பெற்றது. இவ்விளையாட்டினை சம்பூர் பகுதி இளைஞர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஜல்லிக்கட்டு விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் பானையில் பொங்கல் பொங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து சம்பூர் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட காளைகள் அடக்குவதற்காக மைதானத்தினுள் விடப்பட்டன. இவ்வாறு இறக்கப்பட்ட காளைகளின் கழுத்தில் பலகாரங்களும், பணமும் தொங்கவிடப் பட்டிருந்தன. இவ்விளையாட்டினை கண்டுகளிப்பதற்காக ஆயிரக்காண மக்கள் சம்பூர் விளையாட்டு மைதானத்திற்கு வருகை தந்திருந்தனர். காளை மாடுகளை அடக்குவதற்காக இளைஞர்கள், வயோதிபர்கள் என பலரும் போட்டிபோட்டிருந்ததையும் காணமுடிந்தது. இதன்போது மைதானத்தில் விடப்பட்ட காளை மாடுகளை அடக்கியோருக்கு பணமும், பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இப்பரிசுகளை காளை உரிமையாளர்களே வழங்கியிருந்தனர்.

சம்பூரில் ஆரம்ப காலம்தொட்டு இன்றுவரை பட்டிப்பொங்கல் தினமன்று காளைகளை அடக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வைத்தியர் நஸீருக்கு பாராட்டு

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஆரம்ப மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு (PCU) பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடந்த 07 வருடங்கள் அரும்பணியாற்றி, அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலை அதிகாரியாக (DMO) இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்தியர் டாக்டர் எம்.ஐ.ஏ. நஸீரின் பணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது. வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் ஏ.சீ.அப்துல் றசாக் தலைமை வகித்தார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத். எம். ஹனிபா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில், இடமாற்ற வைத்தியர் எம்.ஐ.ஏ.நஸீர், பிரதம அதிதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத். எம். ஹனிபாவினால் நினைவுப் பரிசு வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

## பாலமுனை பாறூக்கின் இலக்கிய பணியை பாராட்டும் பொன்விழா நிகழ்வு

### அரசியல்வாதிகள், கல்விமான்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்பு

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**




பாலமுனை பாறூக்கின் இலக்கிய பணியை பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பொன்விழா நிகழ்வு சனிக்கிழமை (15) பாலமுனை பொறியியலாளர் மர்ஹூம் எம்.சி.ஏ.அமீர் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப பீடத்தின் பீடாதிபதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய காங்கிரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான றிப்கான் பதியுதீன், ஏ.எல். தவம், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. தாஹீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை உதவி தவிசாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ், கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறை தலைவர் கலாநிதி செ. யோகராஜா, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எம். றிபாஸ்தின், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, இலங்கை இறைவரித்திணைக்கள உதவி ஆணையாளர் எம்.எம். முஸம்மில், முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம். காஸிம், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம். றின்ஸான் உட்பட உலமாக்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆளுமைகள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், கல்வியலாளர்கள், கலை, இலக்கிய பிரமுகர்கள் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் பாவேந்தல் பாறூக்கின் பொன்விழாவினை முன்னிட்டு அவருக்கு நினைவுச்சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி, தலைப்பாகை அனுவித்து, வாழ்த்துப்பா வழங்கி கௌரவித்ததுடன் நாட்டில் மரணித்த எழுத்தாளர்களுக்கான ஆத்மசாந்திக்காக வேண்டி மௌன பிராத்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியின் இரண்டாம் வருட பயிலுனர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை செவ்வாய்க்கிழமை (18) ஆரம்பிக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

இவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மூன்று மாதங்கள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கல்வியற் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புதிய முதலாம் வருட பயிலுனர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் நிகழ்நிலை ஊடாக ஆரம்பிப்கப்படுமெனவும், புதிய பயிலுனர்களாக 203 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆரம்ப நெறி கற்கை நெறிக்கு 84 பயிலுனர்களும், கணிதம் 18 பயிலுனர்களும், இஸ்லாம் 25 பயிலுனர்களும், விஞ்ஞானம் 15 பயிலுனர்களும், வர்த்தக கணக்கீடு 18 பயிலுனர்களும், விசேட கல்வி 15 பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.நிகழ்நிலை ஊடாக 03 வாரகால திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் கூறினார். மேலும் புதிய பயிலுனர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.







தன்னார்வ தொண்டு நிறுவனமான அல்ஹிக்மா பௌண்டேசனினால் மூதூரில் விசேட தேவையுடைய 11 நபர்களுக்கு மூதூர் தாருல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் வைத்து வெள்ளிக்கிழமை (14) சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்ட போது. (படம்: தோப்பூர் குறுப் நிருபர்)

# நகர்வலம்



அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யாவின்;

## 100வது ஸலவாத் மஜ்லிஸ் இன்று கொழும்பில்

சீனன்கோட்டை பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா மற்றும் கொழும்பு அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யா இக்வான்கள் இணைந்து நடாத்தும் ஸலவாத் மஜ்லிஸின் 100ஆவது மஜ்லிஸ் இன்று (17) திங்கட் கிழமை கொழும்பு, அத்தியாயத்துஷ் ஷாதுலிய்யா தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

தரீக்காவின் அமல்களை தூய நோக்கோடு செய்து, நல்லுள்ளம் கொண்ட சிறந்த பிரஜைகளாக மிளிர வேண்டும் எனும் நோக்கில் மிகச் சிறிய அளவு இக்வான்களோடு ஆரம்பிக்கப்பட்ட இம் மஜ்லிஸ் இன்று 100வது வாரத்தை சிறப்பிக்கின்றமை விசேட அம்சமாகும்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத்தலைவர் (செய்கு நாயகம்) அவர்களின் ஆன்மீக வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்ட இம் மஜ்லிஸில் தற்போது பல பிரதேசங்களைச் சேர்ந்த இக்வான்கள் ஒன்றிணைந்து கலந்து சிறப்பித்து வருவது விசேட அம்சமாகும்.

இம்மஜ்லிஸின் இன்றைய நிகழ்வில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இக்வான்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று அஸர் தொழுகையை தொடர்ந்து இடம்பெறவுள்ள இம் மஜ்லிஸில் ஸலவாத்துன் நாரிய்யா, வழீபா யாக்கூத்தியா மற்றும் ஹழரா மஜ்லிஸும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி மஜ்லிஸில் தரீக்காக்களைச் சேர்ந்து அனைத்து இக்வான்களும் கலந்துகொண்டு இம் முபாரக்கான மஜ்லிஸை சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.



புத்தள கைத்தொழில் பேட்டையில் புதிய கைத்தொழிற்சாலைகளை திறந்து வைத்த கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்கச அவற்றை பார்வையிடுவதை காணலாம்.

## பொருளாதார நெருக்கடிக்குள்ளும் நாம் பல சேவைகளை முன்னெடுத்தோம்

### மாத்தறை மாநகர முதல்வர்

(மாத்தறை தினகரன் நிருபர்)

உலகில் ஏற்பட்டுள்ள பயங்கர நோய் மற்றும் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எமது மாநகர சபை பல அபிவிருத்திகளை மக்களுக்கு முன்னெடுத்துள்ளதாக மாத்தறை மாநகர முதல்வர் டி.வி. யசரத்ன தெரிவித்தார்.

புதிய வருடத்தில் எம்மை எதிர் நோக்கும் சவால்களை முறியடித்துக் கொண்டு, நகர வாசிகளுக்கு சிறந்த சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நாம் திடசங்கற்பம் கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தவருடத்தின் முதலாவது மாநகர சபைக் கூட்டம் அண்மையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் பேசுகையில், இந்த மாநகர சபையின் ஆட்சி முடிவடைய இன்னும் சில மாதங்களே யுள்ளன. மாநகர வாசிகளின் தீர்க்க வேண்டிய பலபிரச்சினைகள் இருக்கின்றன. கடந்தகாலத்தில் நாம் பல அபிவிருத்தி வேலை திட்டங்களை மேற்கொண்டோம். சனசமூக நிலையங்கள், வாகன தரிப்பிடங்களையும் ஏற்படுத்தினோம். அதேபோல் கங்கையோர பூங்காக்கள், பொதுமக்கள் சந்தைகள், நூல் நிலையங்களையும் நிறுவி அழகுபடுத்தியுள்ளதாகவும் மாநகர முதல்வர் இதன்போது தெரிவித்தார். மாநகர சபை உறுப்பினர்களாக ஜெஸ்மின் ஸாலி, மொஹமட் வாஹிம், சதுர கருணரத்ன ஆகியோரும் தமது கருத்துக்களை இதன்போது தெரிவித்தனர்.

# நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுச்செல்ல எதிர்க்கட்சி முயற்சி

## ஹம்பாந்தோட்டையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



நாட்டை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுச் செல்வதற்கு எதிர் கட்சியினர் முயற்சித்து வருவதாக இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அமைச்சரும் டிஜிட்டல் தொழிநுட்ப பிரதி அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் ஆகிய சங்கங்களின் ஹம்பாந்தோட்டை மாவட்ட சம்மேளனத்தில்; கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ (15) இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், சுதந்திரத்திற்கு பிறகு எமதுநாட்டில் உருவான அரசாங்கங்களில் சமூக சூழல், பூகோள தொற்று நிலைமை போன்ற பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்த ஒரு அரசாங்கம் என்றால் அது எமது அரசாங்கமாகும். நாம் இன்றும் பூகோள தொற்று நிலைமைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒருசில நாடுகளில் தொடர்ந்தும் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன. உலக பொருளாதாரமும் பாரிய அளவில் சரிவினை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஒரு சில நாடுகளின் பொருளாதாரமும் அந்த நாட்டின் பணமும் பின்னடைந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் அறிவித்துள்ளன.

பலமான நாடுகள் என கூறி வந்தவர்கள் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை இடை நிறுத்தியுள்ளதை நாம் காணலாம். இருந்தாலும் எமது அரசாங்கம் இவ்வாறான செயல்கள் எதனையும் செய்யவில்லை.

இரண்டு வருட காலமாக சேவைக்கு வராத ஊழியர்களுக்கும் எமது அரசாங்கம் சம்பளத்தினை வழங்கியதை ஞாபகப்படுத்துகிறேன். கட்சி என்ற வகையில் பாரிய சவால் மிகுந்த ஒரு காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். எமக்கு சிறந்தவொரு அரசியல் தலைமைத்துவம் உள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அந்த சிறந்த அரசியல் தலைமைத்துவத்தினூடாக நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மையினை ஏற்படுத்தி நாட்டை கட்டியெழுப்புவோம்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒருசிலர் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அவதானிக்கும்போது அவர்கள் எதிர்க்கட்சியிலும் அரசாங்கக் கட்சியிலும் இருக்கமுடியும். இவர்களின் இலக்கு நாட்டை அரசியல் ரீதியாக ஸ்திரமற்ற நிலைமைக்கு இட்டுச் செல்வதாகும் எனவும் அமைச்சர் நாமல் இதன்போது தெரிவித்தார்.

## மகப்பேற்று மருத்துவர் பேராசிரியர் அக்பரின் சேவைநலன் பாராட்டு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்





மன்னார் விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் நிபுணர் பேராசிரியர் எஸ்.எப்.எல். அக்பரின் சேவையை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (16) மதுரங்குளி ட்ரீம் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் மில்லத் மாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிரேஷ்ட மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் நிபுணர் பேராசிரியர் எஸ்.எப்.எல். அக்பர், வடமேல் மாகாண முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முஹம்மது பரீத், முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம்.முஹ்சீன் உட்பட வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, "வாழிடமிழந்த மானிடம்" எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சுகைப் எம் காசிமினால் கவிதை நிகழ்த்தப்பட்டதுடன், முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம்.முஹ்சீன் இடம்பெயர்வுக்கு முன்பும், பின்பும் விடத்தல்தீவு மண்ணின் கல்வி நிலை எனும் தலைப்பிலும் உரையாற்றினார்.

அத்துடன், விடத்தல்தீவு மண்ணில் இருந்து சமூக சேவைபுரிந்து மரணித்த சமூக சேவையாளர்களும் இதன்போது நினைவுகூரப்பட்டனர்.

அத்தோடு, இஸ்லாமிய பார்வையில் மகப்பேற்று மருத்துவம், சட்டத்தின் பார்வையில் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் மருத்துவம், விடத்தல்தீவு பிரதேச கல்வி முன்னேற்றத்திற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்ற தலைப்புக்களிலும் சிறப்பு உரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பேராசிரியர் எஸ்.எப்.எல். அக்பரின் சேவைகளை பாராட்டி சிறப்பு அதிதிகளால் பொன்னாடை போர்த்தியும், விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தினால் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் மாவட்டத்தில் மேலும் 437 பட்டதாரிகளுக்கு நியமனம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மேலும் 437 பட்டதாரிகளுக்கு மத்திய அரசாங்கத்தின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டதற்கு அமைய தொழிலற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா தாரிகளுக்கு நிரந்தர தொழில் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனங்களை வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன ஆகியோர் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கி வைத்தனர். அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தரவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.எச். நந்தசேன, இசாக் ரகுமான் மற்றும் வட மத்திய மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஆசிரிய ஆலோசகர்கள் புதிய சம்பள திட்டத்தில் பாதிப்பு

### அரசாங்கம் அநீதி இழைத்துள்ளதாகவும் கவலை தெரிவிப்பு

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

ஆசிரிய சேவை மற்றும் அதிபர் சேவை ஆகியவற்றிலுள்ள ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் அதிகரித்துள்ள புதிய சம்பள அதிகரிப்பு சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி அதிகரித்த சம்பளத்தை வழங்குவதற்கு வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டத்திலுள்ள எட்டு கல்வி வலயங்களிலும் அதற்காக சம்பள சீராக்கல்கள் நடைபெறுவதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிர்மலா ஏக்கநாயக்கா தெரிவித்தார்.

அத்தோடு புதிய சம்பள திட்டத்தில் வடமத்திய மாகாணத்திலுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரிய சேவை தரம் ஒன்றில் உயர்ந்த படியேற்றத்தில் உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் பலருக்கு ஆசிரிய சேவையில் உயர்வடையும் சம்பளத் தொகையை விடவும் குறைந்த தொகையே தமக்கு கிடைக்கவுள்ளதாகவும் இதனால் ஆசிரிய ஆலோசக சேவையிலிருந்து தாம் விலகி ஆசிரிய சேவையில் தாம் தொடர்ந்து இருக்க போவதாகவும் பல ஆசிரிய ஆலோசகர்கள் முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

தாம் பல சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைகளுக்கு சென்று தமது கடமைகளை மேற்கொண்டு ஆசிரிய மேற்பார்வை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொண்டு வருவதாகவும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு தயார் படுத்தும் வகையில் கருத்தரங்குகளை, விசேட வகுப்புக்களையும் தாம் நடாத்தி வருவதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் தம்முடன் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள் தம்மை விட அதிகமான சம்பளத்தை பெறும் போது தமக்கு குறைந்தளவு சம்பள அதிகரிப்பில் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தமக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும் ஆசிரிய ஆலோசகர்கள் பலர் தெரிவித்தனர்.

## மதுரங்குளியில் புதிய பாலர் பாடசாலை திறப்பு

### அலி ஸப்ரி ரஹீம் எம்.பி பங்கேற்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)





மதுரங்குளி நல்லாந்தலுவவில் அமைந்துள்ள அல் மதீனா பாலர் பாடசாலையின் 2022 ம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும், புதிய கட்டட திறப்பு விழாவும் (15) இடம்பெற்றது.

நல்லாந்தலுவ பெரிய பள்ளிவாசலின் செயலாளரும், அல் மதீனா கிராம அபிவிருத்தி சங்க செயலாளருமான சுஹைப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார். கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைசல் மரைக்கார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் பிரதி தலைவருமான சஹீத் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## குரங்குகளால் பொது மக்களுக்கு தொல்லை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பலாகல பிரதேச செயலக பகுதியில் உள்ள பல கிராமங்களில் உணவுக்காக அலையும் குரங்குகளினால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இப்பகுதியில் மரக்கறி, பழ வகை, சேனைப்பயிர், வாழைத்தோட்டங்கள் மற்றும் ஏனைய பயிர் நிலங்களை தேடி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

உணவுக்காக வருகைதரும் குரங்குகள் பயிர்களையும் நாசம் செய்வது மட்டுமின்றி இவற்றின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட நடவடிக்கைகளை பாதிப்படைய செய்வதுடன் வீடுகளை ஆக்கிரமித்து உணவு பொருட்கள் உபகரணங்களுக்கும் சேதத்தை விளைவிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.





வெள்ளவத்தை றோட்றெக்ட் கழகம் ஏற்பாடு செய்த தைப் பொங்கல் விழா வெள்ளவத்தை சிறுவர் கைத்தொழில் மைதானத்தில் கழகத்தின் தலைவர் பிறெங்க் ஜோசப் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாவட்ட றோட்றெக்ட் தலைவர் மர்ஷத் பாரி, செயலாளர் இந்தி தயாபரன், பொருளாளர் றெபெக்கன் பிரியதர்ஷினி, திட்ட தலைவர் மனோராஜ் ராஜரத்தினம், இணை திட்ட தலைவர் ஹரிந்திரன் பாலகிருஷ்ணன் மற்றும் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

படம்: ருசைக் பாரூக்



இலங்கை பொதுச் சுகாதார சங்கத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள வெலிகம தலைமை பொதுச் சுகாதார பரிசோதகர் நிஹாலை கௌரவிக்கும் நிகழ்வு வெலிகம கோட்டகொடை அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் அண்மையில் வெலிகம தென்னிலங்கை இஸ்லாமிய செயலக கட்டடத்தில் இடம்பெற்றபோது எடுத்த படம். (படம்: வெலிகம தினகரன் நிருபர்)

# சர்வதேச செய்திகள்

## திபெத்தியர்கள் பற்றி அமெரிக்கா கவலை



சிறுபான்மை சமூகத்தை இலக்குவைத்து சீனாவின் நடவடிக்கைகள் அண்மைக்காலத்தில் கடுமையாக்கப்பட்டிருக்கும் நிலையில் திபெத்தியர்களின் அவல நிலை குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கவலை வெளியிட்டுள்ளது.

“புத்தர் சிலைகளை இடித்தழிப்பது, வழிபாட்டு சக்கரங்களை அகற்றுவது மற்றும் வழிபாட்டு கொடிகள் மீது தீ வைப்பது உட்பட திபெத்தியர்களுக்கு எதிராக சீனாவின் நடவடிக்கைகள் அதிகரித்திருக்கும் செய்திகளால் நாம் பெரும் கவலை அடைந்துள்ளோம். திபெத்திய உரிமைகளுக்கு மதிப்பளிக்கும்படி சீனாவை நாம் வலியுறுத்துகிறோம்” என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச மதச் சுதந்திர அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

“அமெரிக்க வெளிநாட்டு கொள்கையின் அடிப்படை நோக்கம் ஒன்றாக அனைவரதும் சமய மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கு பதிப்பளிப்பதை மதச் சுதந்திர அலுவலகம் ஊக்குவிக்கிறது” என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## பசுபிக் எரிமலை வெடிப்பை அடுத்து சுனாமி எச்சரிக்கை

### டொங்கா நாட்டில் பெரும் பாதிப்பு


டொங்காவுக்கு அருகே கடலுக்கு அடியில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பாரிய எரிமலை வெடிப்பை தொடர்ந்து பசுபிக் பகுதியைச் சூழ மேலும் சுனாமி அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக கண்காணிப்புக் குழு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

எனினும் அச்சுறுத்தல் குறைந்திருப்பதாகவும் வலுவான அல்லது அசாதாரணமான நிரோட்டங்கள் பற்றி எச்சரிக்கையுடன் இருக்கும்படியும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் நேற்று தெரிவித்தது.

கடற்கரை பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி அமெரிக்கா மற்றும் ஜப்பான் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

மேலும் சுனாமி தாக்கும் வாய்ப்புகள் குறைந்திருந்தபோதும் இந்த எரிமலை வெடிப்பால் டொங்காவில் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய அச்சம் அதிகரித்துள்ளது. இந்த தீவு நாட்டின் தலைநகர் நுகோலோபாவில் படகுகள் மற்றும் பெரிய பாறைகள் கரைக்கு அடித்து வரப்பட்டுள்ளதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசின்டா ஆர்டர்ன் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

“எரிமலை சாம்பல் நுகோலோபாவை மூடியுள்ளபோதும் அங்கு நிலைமை அமைதியானதாக மற்றும் ஸ்திரமானதாக உள்ளது” என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குட்டி தீவு



நாட்டுடனான தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சேதங்கள் பற்றி அளவிட விமானப் படை கண்காணிப்பு விமானங்களை அனுப்ப தயாராகி வருவதாகவும் ஆர்டர்ன் குறிப்பிட்டுள்ளார்.

டொங்காவில் இதுவரை உயிரிழப்புகள் அல்லது காயங்கள் பற்றி உறுதி செய்யப்படவில்லை. ஏற்பட்டிருக்கக் கூடிய சேதங்கள் பற்றி கவலையை வெளியிட்டிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனியோ பிளிங்கன் உதவிகளை அனுப்ப தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

டொங்கா தலைநகரில் இருந்து 65 கிலோமீற்றருக்கு அப்பாலிருக்கும் எரிமலையே வெடித்துள்ளது. அந்த தீவின் மீது ஒரு மீற்றருக்கு மேல் உயரத்துக்கு அலை தாக்கியுள்ளது.

நகரில் இருக்கும் தேவாலயம் ஒன்று மற்றும் பல வீடுகள் மீது நீர் புகுந்திருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

ஜப்பானில், அமாமி நகரில் 1.2 மீற்றர் உயரமுள்ள சுனாமி அலை ஏற்பட்டுள்ளது. பிஜி அரசு சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் கடலோரப் பகுதிகளில் நிவாரண முகாம்களைத் திறந்துள்ளது.

## சூக்கி மீது மேலும் ஐந்து குற்றச்சாட்டு



மியன்மாரின் பதவி கவிழ்க்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூக்கி மீது அந்நாட்டின் இராணுவ நீதிமன்றம் ஒன்று மேலும் ஐந்து ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது. ஹெலிகொப்டர் ஒன்றை வாங்கியது மற்றும் வாடகைக்கு அமர்த்தியது தொடர்பிலேயே அவர் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சி தொடக்கம் 76 வயதான சூக்கி சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

மியன்மாரின் உத்தியோகபூர்வ இரகசிய சட்டங்களை மீறியது உட்பட சூக்கி மீது குற்றவியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் பல சுமத்தப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் 100 ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

ஏற்கனவே அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

புஞ்சி பொறளை, குலரத்ன பாதை, 928/17 என்ற முகவரியை சார்ந்த **லக்மின மஹேஷ் துஷாரா பொயிஸ்** (தே.அ.அ. இல. 198035303334) ஆகிய நான் 2018.08.22ம் திகதியிடப்பட்டதும் 7013 என்ற இலக்கமுடையதுமானதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் **புஷ்பா டி. கக்கொட** ஆராய்ச்சி என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு கொழும்பு-07, மேலதிக உதவி பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 1627 என்ற இலக்கத்தின் கீழ் 45ஆம் பக்கத்தில் 03ஆம் பாகத்தில் பதிவு செய்யப்பட்டு இலங்கை குடியரசின் கொழும்பு-10, புஞ்சி பொறளை குலரத்ன பாதை, 928/17 என்ற இலக்கத்தைச் சேர்ந்த பிரான்கிகே பவானி விஜயந்தி பெரேரா என்பருக்கு (தே.அ.அ. இல. 198073701991) நிறை வேற்றினேன். மேற்கூறப்பட்ட அற்றோணித்தத்துவமானது இன்றிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்டுள்ள **பிரான்கிகே பவானி விஜயந்தினி பெரேரா** என்பவரினால் எமது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் பொறுப்பேற்க மாட்டேன் என இத்தால் அறிவிக்கின்றேன்.

**லக்மின மஹேஷ் துஷாரா பொயிஸ்**

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அரபு அமீர் இராச்யம், அபுதாபி, த.பெ.எண். 43088, வரையறுக்கப்பட்ட பியூக்ரோ சர்வி (மிட்ல்ஈஸ்ட்) கம்பனியில் கடமை புரியும், தற்போது பிலியந்தல, மாவித்தர, இல. 26/3இல் வசிக்கும் **மாபிட்டியஆக தொன் பிரியந்த புஷ்ப குமார** (தே.அ.இல. 680201951V மற்றும் இலங்கை கடவுச் சீட்டு இல எம் 4667800) கொண்ட நான் அற்றோணி அதிகாரியாக பிலியந்தல, மாவித்தர, இல. 26/3இல் வசிக்கும் **ஜுவன் ஆச்சாரிகே மானெல் காந்தி** (தே.அ.அ.இல. 635462752V) அற்றோணி அதிகாரியாக பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட இலங்கையின் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2015.09.08ம் ஆண்டு எழுத்துமூல அதிகாரங்கள் மற்றும் அற்றோணி அனுமதி ஆவணத்தின் 167ஆம் வகுதியில் 42ஆம் பக்கத்தில் 5060 தினப் புத்தக இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விஷேட அற்றோணி அதிகாரம் மேற்படி அற்றோணி அதிகாரியான என்னால் இரத்துச் செய்யப்படுவதுடன் மேற்படி ஆவணங்கள் இப்பொழுது முதல் அதிகாரமற்றதாக்கப்படுவதாக சகலருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

2022 ஜனவரி 13ம் திகதியன்று

**மேற்படி அற்றோணி அதிபதி**
**மாபிட்டியகே தொன் பிரியந்த புஷ்பகுமார**


## பன்றி இதயத்தை பெற்றவர் பின்னணி பற்றி விமர்சனம்



உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை மூலம் உலகில் முதல் முறை பன்றியின் இதயத்தை பெற்ற நபர், ஒருவர் மீது ஏழு தடவை கத்தியால் குத்தித் தாக்கிய குற்றவாளி என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

57 வயதான டேவிட் பென்னட், 1988ஆம் ஆண்டு, எட்வர்ட் ஷூமேக்கர் என்பவரை கத்தியால் குத்திய வழக்கில் குற்றவாளி என்று ஷூமேக்கரின் சகோதரி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை அடுத்து பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட ஷூமேக்கர் இரண்டு தசாப்தங்களின் பின் 2007இல் உயிரிழந்துள்ளார்.

ஆனால், ஒருவரது குற்றங்களின் பின்னணி, அவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்படுவதற்கு ஒரு போதும் காரணமாக இருக்க முடியாது என்று அறுவை சிகிச்சையை மேற்கொண்ட குழு கூறியுள்ளது. இந்த தாக்குதல் சம்பவம் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்தது. பென்னட்டின் மனைவி 22 வயதான ஷூமேக்கரின் மடியில் அமர்ந்ததே இதற்கு காரணம் என்று டவுனி குறிப்பிட்டுள்ளார். இந்த தாக்குதலுக்காக அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

## கமேனி ட்விட்டர் கணக்கு நீக்கம்

ஈரானின் உயர்மட்ட ஆன்மிகத் தலைவர் ஆயத்துல்லா அலி கமேனியுடன் தொடர்புடைய கணக்கு ஒன்றை ட்விட்டர் நிரந்தரமாக ரத்துச் செய்துள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பைக் கொலை செய்வது போல் சித்திரிக்கும் வீடியோ ஒன்று, அந்தக் கணக்கில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது.

அது, கமேனியின் அதிகாரத்துவ இணையப்பக்கத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

தற்காலிகமாக முடக்கப்பட்ட கணக்கை ஏமாற்றி மீறுவோருக்கு எதிரான கொள்கையின் அடிப்படையில், அந்தக் கணக்கு ரத்து செய்யப்பட்டதாக ட்விட்டர் குறிப்பிட்டது.

கடந்த ஆண்டு, டிரம்ப்பைப் பழி வாங்குவது குறித்த பதிவு ஒன்று தொடர்பில் மற்றொரு ட்விட்டர் கணக்கு ரத்து செய்யப்பட்டது. கமேனியின் மற்ற கணக்குகள் வழக்கம்போல் செயல்படுகின்றன.


மத்திய சுற்றாடல் அதிகார சபை

### இறுதித்தீர்மான பொது அறிவித்தல்

**உத்தேசிக்கப்பட்ட தெஹியோவிட்ட கேகாலை மாவட்டத்தில் அமையவுள்ள சீதாவக்க கங்கை நீர் மின்சக்தி திட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (சு.தா.ம.)**
**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையையும், பொதுமக்களின் கருத்துக்களையும் அதற்கான திட்ட ஆதரவாளரது பதில்களையும் ஆய்வு செய்ததன் பின்னர் ‘மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்கு விதி 13 இற்கமைவாக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விசேட விதிகளுக்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு -02 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத் தருகிறேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை.**
**‘பரிசரபியச’,**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**


## ஒரு மில். டொலருக்கு செல்பி படம் விற்பனை



இந்தோனேசியாவில், செல்பி படமெடுத்து விற்ற ஆடவர் இணையப் பிரபலமாக உருவெடுத்துள்ளார்.

சுல்தான் குஸ்தாப் அல் கொஸாலி என்ற 22 வயது மாணவர் செல்பி படங்களின் விற்பனையிலிருந்து ஒரு மில்லியன் டொலர் ஈட்டியுள்ளார்.

படங்கள் ஓபன்சீ எனும் விற்பனைத் தளத்தில் மின்னிலக்கச் சொத்தான என்.எப்.டீ என்ற வடிவில் விற்பனையாயின.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் கொஸாலி கடந்த 5 ஆண்டுகளாக அன்றாடம் ஒரு செல்பி படத்தை எடுத்துள்ளார். அவர் தம்முடைய பட்டமளிப்பு விழாவையொட்டி ஒரே இடத்தில் எடுக்கப்பட்ட சுமார் 1,000 செல்பி படங்களைத் தொகுத்துள்ளார்.

இருப்பினும், யாரும் அதை வாங்க மாட்டார்கள் என்றே அவர் எண்ணினார். எனினும் கொஸாலியின் படங்களைக் கண்ட ஒரு பிரபலச் சமையல் வல்லுநர், அவற்றை விளம்பரப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, 400க்கும் அதிகமானோர் படங்களை வாங்கியுள்ளனர்.

## அமெரிக்காவில் ரயில் மீது தள்ளிவிடப்பட்டவர் பலி



அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் டைம்ஸ் சதுக்க ரயில் நிலையத்தில் ரயிலுக்கு முன்னால் தள்ளிவிடப்பட்டு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


பெண்ணைத் தள்ளிவிட்டதாக நம்பப்படும் ஆடவர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடினார். ஆனால் சில மணி நேரத்தில் ஆடவர் அதிகாரிகளிடம் சரணடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் வயது 40 என்றும் அவரைப் பற்றிய மேல்விபரங்கள் கிடைத்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

கைது செய்யப்பட்ட ஆடவருக்கு 61 வயது என்றும் அவர் வீடில்லாதவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆடவர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பெண் தள்ளிவிடப்பட்ட சம்பவத்தை ரயிலுக்குக் காத்திருந்த பல பயணிகள் அதிர்ச்சியுடன் பார்த்தனர். கடந்த வாரமே, நியூயோர்க் நகரில் வீடில்லாதவர்கள் ரயில் நிலையங்களிலும் வீதிகளிலும் தங்குவதைத் தடுக்கும் பணிகள் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்திருந்தது.

## அமெரிக்க யூத ஆலயத்தில் பிணைக்கைதிகள் விடுதலை



அமெரிக்காவின் டல்லாஸ் புறநகர் பகுதியில் உள்ள யூத தேவாலயம் ஒன்றில் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்ட நால்வரும் எந்த காயமும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை காலை ஆராதனையின்போதோ இவர்கள் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் சிறப்பு ஆயுதப் படை மற்றும் பேச்சுவார்த்தையாளர்களை அனுப்பியதோடு, தாக்குதல்தாரியுடன் பல மணி நேரம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்த சம்பவம் முடிவுக்கு வரும் முன் அந்த இடத்தில் வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. பிணைக் கைதிகளை பிடித்திருந்தவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இதன்போது தாக்குதல்தாரி, 2010 ஆம் 86 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் நரம்பியல் நிபுணர் ஆபியா சாதிக்கியை விடுவிக்கும்படி கோரியதாக கூறப்படுகிறது. அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவரை சுட்டுக்கொன்றதற்கே அவர் சிறை அனுபவித்து வருகிறார்.


திகதி 14.01.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4647
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,887,940.00
ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 7 6 6 1 2 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,400,873.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2942
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,707,620..00
ஆங்கில எழுத்து: Y — வெற்றி இலக்கங்கள்: 45 49 79 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,671,565.60

Mega Power மெகா பவர் கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 995
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,936,540.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,063,449.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: V — சுப்பர் இலக்கம்: 16 — வெற்றி இலக்கங்கள்: 17 51 54 67

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 677
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,222,820.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 24 29 33 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,585,760.00

சுபிரி வாசனா — சீட்டிழுப்பு இலக்கம் :1667
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,155,840.00
சுப்பர் இலக்கம்: 10 — வெற்றி இலக்கங்கள்: 26 40 56 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,554,707.20

வாசனா சம்பத Vasana Sampatha — சீட்டிழுப்பு இலக்கம் :1684
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,021,540.00
ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 23 27 51 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,224,517.90

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

திகதி 15.01.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4648
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,293,150.00
ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 8 6 1 9 4 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,400,873.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2943
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,049,200.00
ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 21 39 45 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,827,094.40

Mega Power மெகா பவர் கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 996
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,975,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,130,846.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: F — சுப்பர் இலக்கம்: 17 — வெற்றி இலக்கங்கள்: 26 29 36 69

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 678
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,068,840.00
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 21 75 79 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,681,522.80

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA — சீட்டிழுப்பு இலக்கம் : 1198
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,976,860.00
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 0 0 9 6 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,712,648.40

சுபிரி வாசனா — சீட்டிழுப்பு இலக்கம் :1668
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,152,640.00
சுப்பர் இலக்கம்: 09 — வெற்றி இலக்கங்கள்: 39 46 55 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,554,707.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

# மலைச்சாரல்







மலையக பெருந்தோட்டங்களில் தைப்பொங்கல் தினத்தன்று இராமர் பஜனை ஊர்வலங்கள் நடைபெற்றன. நுவரெலியா கந்தப்பளை பிரதேசத்தில் இராமர் பஜனை கம்பம் தூக்குதல் மற்றும் சப்பார ஊர்வலங்கள் விமர்சையாக இடம்பெற்றன. அந்த வகையில் கந்தப்பளை பார்க் தோட்டத்தில் இடம்பெற்ற இராமர் பஜனை ஊர்வலத்தில் இராமர் வரலாறு கூறும் நிகழ்வுகளுடன், வீடுகளுக்கு பஜனை ஊர்வலம் வருகை தந்து பூஜை வழிபாடுகளில் மக்கள் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த

## மக்களால் உருவான அரசாங்கமே தற்போதைய அரசாங்கம்

### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசாங்கமே தற்போதைய அரசாங்கமென விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்திய அரசாங்க நிதி உதவியினூடாக மலையக பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட இந்திய வீடமைப்பு திட்ட வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தி அதனை பயனாளிகளுக்கு கையளிப்பதற்கான திறப்புகளை வழங்கும் வைபவம் (15) கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இந்திய வீட்டுத்திட்டத்தை தற்போதைய அரசாங்கம் மலையக பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அமரர் தொண்டமான் நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை உருவாக்க பாடுபட்டவர். அதேபோல் தற்போதைய ஜீவன் தொண்டமானும் மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்றார்.

மலையக தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் மூலமே நாட்டுக்கு அந்திய செலாவணி கிடைக்கின்றது. நாட்டில் உருவான ஒவ்வொரு அரசாங்கமும் மலையக மக்கள் தொடர்பில் பேசினார்கள். ஆனால் ஆட்சியமைத்ததுடன் உங்கள் துக்கங்களை அவர்கள் கண்டுக்கொள்ளவில்லை.

சுதந்திரம் பெற்று 74 வருடங்களாகியும் மலையக மக்களுக்கு உரிய காணிகள் வழங்கப்படவில்லை. அதேபோல் சுதந்திரக் கல்வியும் மலையக மாணவர்களுக்கு உரிய வகையில் கிடைக்கவில்லை. எனவே ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் மலையக சூழலையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டிய கடமை உண்டு.

அதன்படி இன்றைய அரசாங்கம் சிரமங்களுக்கு மத்தியிலும் தடைப்பட்டிருந்த அபிவிருத்தியை முன்னெடுத்து செல்கின்றது. அதற்கமைய மலையக பகுதிகளில் வீதிகள் உள்ளிட்ட அபிவிருத்தி பணிகள் நடைபெறுகின்றன. பெருந்தோட்ட பாடசாலைகள் இன்று தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. பொருளாதார ரீதியில் உலகமும் எமது நாடும் பல சவால்களை சந்தித்துள்ளது. அதன்படி ஜனாதிபதியும், பிரதமரும் தலையிட்டு பெருந்தோட்ட மக்களுக்கு கோதுமை மா சலுகையை வழங்க தீர்மானித்தனர்.

அதன்படி 80 ரூபாவுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமையவே இந்த விடயம் சாத்தியமாகியுள்ளது. ஆகவே நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசாங்கமே இதுவாகும். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என்றார்.

## இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்கு 3992 மில்லியன் ஒதுக்கீடு

### உல்லாச பயணத்துறைக்கு முன்னுரிமை

### பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

2022 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்காக அரசாங்கம் 3992 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக இரத்தினபுரி மாவ ட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அகில சாலிய எல்லாவள தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக செய்தியாளர்ககளுக்கு தகவல் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கொரோனா காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி வெகுவாக பாதிக்கப்பட்டது வருடாந்தம் 4.5 பில்லியன் ரூபா வருமானம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக உல்லாசப் பய ணத்துறை வருமானம் முற்றாக முடங்கியது.

அதனால் இந்த ஒதுக்கீட்டில் எமது நாட்டுக்கு அவசியமான அந்நியச் செலாவணியை மிக விரைவாகப் பெற உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசரம் காணப்படுகிறது .

எனவே உல்லாச பிரயாணத்துறைக்கு அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்து இரத்தினபுரி மாவட்டம் மற்றும் பலாங்கொடை பிரதேசங்களில் உள்ள வெளிநாட்டு உள்நாட்டு உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் இவ்விடங்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கண்டி மாவட்டத்தில் 1188 வீடுகள்

**அக்குறணை குறூப் நிருபர்**

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசின் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் 1188 வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருகிராம அதிகாரி பிரிவிற்கு ஒரு வீடு என்ற அடிப்டையில் இது வழங்கப்பட உள்ளது. தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 'உங்களுக்கு ஒரு வீடு, நாட்டுக்கு நாளை' என்ற திட்டத்தின் கீழ் இது வழங்கப்பட உள்ளது. இதில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 6 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படும். அத்துடன் வீடமைப்பிற்குத் தேவையான ஆலோணைகளையும் வீடமைப்பு அதிகார சபை வழங்கும்.

அண்மையில் கண்டி உடுநுவர பிரதேசத்தில் மேற்படி திட்டத்தின் கீழ் 30 குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்கத் தேவையான உதவிளை வழங்கும் வைபவத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இதனைத் தெரிவித்தார். 2021ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 902 வீடுகளை அமைக்க நிதி உதவி வழங்கப்பட்டதாகவும் அதில் 350 வீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கண்டி மாவட்ட வீடமைப்பு அதிகார சபைத் தலைவர் பி.எல். ஏ.பிரியந்த தெரிவித்தார்.

## கண்டி மறை மாவட்ட புதிய ஆயராக பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை

**எம்.ஏ.அமீனுல்லா**



கண்டி மறை மாவட்டத்தின் புதிய ஆயராக பேரருட்திரு கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை பணியேற்கவுள்ளார். இந்தப் பதவியேற்பு விழா இன்று (17) முற்பகல் 9.30 மணிக்கு கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெறும் என கண்டி மறைமாவட்டத்தின் ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட ஆயர் பேரவையில் அங்கம் வகிக்கும் ஆயர்கள் பலரும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாக மறைமாவட்டத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 38 வருட காலத்திற்கும் மேலாக கண்டி மறைமாவட்ட ஆயராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் பேரருட்திரு வியானி பெர்னாண்டோ ஆண்டகை ஓய்வு பெற்றுள்ள நிலையில் அவரின் வெற்றிடத்திற்கு கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை மறை மாவட்டத்தின் ஏழாவது ஆயராக பணியேற்கவுள்ளார்.

புதிய மறை மாவட்ட ஆயர் 1958ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி மொரட்டுவையில் பிறந்தவர். இவர் 1985ஆம் ஆண்டு சிலாபம் மறை மாவட்டத்தில் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1989ஆம் ஆண்டு தொடக்கம் அம்பிட்டியவில் உள்ள தேசிய குருமடத்தின் அதிபராகவும், 2000ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய குருமடத்தின் இறையியல் பிரிவை வழிநடத்திய இயக்குனராகவும் அவர் கடமையாற்றினார். பின்னர், 2006ஆம் ஆண்டு தொடக்கம் சிலாபம் மறை மாவட்ட ஆயராக இறைபணி செய்து, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கண்டி மறை மாவட்ட ஆயராக திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

கண்டி மறைமாவட்டம் என்பது கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களையும் பெருந்தோட்டப் பகுதிகளையும் உள்ளடக்கிய பிரிவாகும்.





2020 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது வாக்குறுதியளிக்கப்பட்ட இதல்கஸ்ஹின்ன தோட்ட கொலணி வீடுகளுக்கான தண்ணீர் தொட்டி மற்றும் குழாய்களை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார். மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றி, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் (14)வெள்ளிக்கிழமை நடைபெற்ற தைப்பொங்கல் பூஜை நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

தலவாக்கலை குறூப் நிருபர்

## கண்டி திரித்துவக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா

**எம்.ஏ.அமீனுல்லா**

இலங்கையின் முன்னணி பாடசாலைகளுள் ஒன்றாகப் புகழ்பெற்ற கண்டி திரித்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்தக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தைக் கொண்டாடுதல், எதிர்காலத்தைத் திட்டமிடுதல், மனிதகுலத்திற்கு சேவை செய்தல், எமது பொதுவான இல்லத்தை பேணிக் காத்தல் என்ற தொனிப்பொருட்களில் நிகழ்ச்சிகள் இடம்பெறும். இன்று(17) திரித்துவக் கல்லூரியின் ஸ்தாபகர் தின நன்றி ஆராதனை கல்லூரியின் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை திருச்சபையின் குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேராயர் கீர்த்திசிறி பெர்னாண்டோ தலைமை தாங்குவார்.

1872ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரி சமூகத்தின் கீழ் வணக்கத்திற்குரிய பிதா ரிச்சர்ட் கொலின்ஸ் அடிகளார் *The Kandy Collegiate School* என்ற பெயரில் கண்டி திரித்துவக் கல்லூரியை ஆரம்பித்தார்.

இந்தக் கல்லூரியானது கடந்து வந்த 150 வருட காலத்தில் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கி, பல ஆளுமைகளை உருவாக்கியுள்ளது.

இவர்களில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஐநா துணைச் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, மருந்தாக்கல்துறை விற்பன்னர் பேராசிரியர் சேனக்க பிபிலே, இராணுவ கட்டளைத் தளபதி டென்சில் கொப்பேகடுவ, இலங்கைக்காக முதலாவது ஒலிம்பிக் பதக்கம் வென்ற டன்கன் வைற், கிரிக்கட் நட்சத்திரம் குமார் சங்கக்கார ஆகியோரும் அடங்குகிறார்கள்.

## பஸ் மோதி 64 வயது நபர் ஸ்தலத்தில் பலி உறவினர்கள் பஸ்ஸுக்கு தீ வைப்பு



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

அவிஸ்ஸாவலை மாலியன்கம வீதியில் ரிட்டிகஹவெல பகுதியில் நே ற்று முன்தினம் மாலை இடம் பெற்ற தனியார் பஸ் வண்டி துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த 64 வயதான நபர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

இதனால் சீற்றமடைந்த மரணித்தவரின் உறவினர்கள் பஸ் வண்டியை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றுக்குத் தொழிலாளர்களைப் கொண்டு சென்று கொண்டிருந்த போது இவ்விபத்து ஏற்பட்டதாகவும் பஸ் தீ வைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொளெ்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜனவரி 17
திங்கட்கிழமை



# கிளிநொச்சிக்கு ஒதுக்கிய ரூ. 545 மில்லியனை மக்கள் நலன்களை நிறைவு செய்ய செலவிட அமைச்சர் பணிப்பு

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி மாவட்டத்துக்கு வரவு செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ள 545 மில்லியன் ரூபா பணத்தை வெளிப்படைத்தன்மையுடன், மக்கள் நலன்சார்ந்து செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

2022ம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின்படி, கிராமத்துடனான உரையாடல் திட்டத்தின்கீழ் கிளிநொச்சியின் 95 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் தலா 3 மில்லியன் படி 285 மில்லியன் ரூபாவும், இணைத்தலைவரின் ஒதுக்கீடாக 100 மில்லியன் ரூபாவும், 40 வட்டாரங்களுக்கும் தலா 4 மில்லியன்படி 160 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 545 மில்லியன் ரூபா கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.



இதில், முதலாவது காலாண்டுக்கென கிராமத்துடனான உரையாடல் திட்டத்துக்கு 58 மில்லியனும், வட்டாரங்களுக்கு 32 மில்லியனும், இணைத்தலைவரின் ஒதுக்கீடாக 20 மில்லியனுமாக, மொத்தம் 110 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமத்துடனான உரையாடல் திட்டத்தின்படி கிளிநொச்சியின் 95 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இணைத்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர்கள் தலைமையில் பொதுமக்களுடனான நேரடிக் கலந்துரையாடல் மூலம் முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதில், சில கிராமங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதிப்பற்றாக்குறை உள்ள திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து இணைத்தலைவரின் நிதியொதுக்கீடு பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும் வெளிப்படைத்தன்மையுடன் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவு கடற்கரையில் இறந்த நிலையில் கரையொதுங்கிய மீன்கள்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்கரையில் அதிகமான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு கடற்கரையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த செயற்பாட்டுக்கு இந்திய இழுவைமடி மீன்பிடியினை மேற்கொள்ளும் மீனவர்களே காரணமாக இருக்கக் கூடும் எனவும் , அவர்கள் வலைகளில் பிடிபட்டு இறந்த சிறிய மீன்களை மீண்டும் கடலுக்குள் கொட்டி உள்ளார்கள் என நெடுந்தீவு மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# முல்லைத்தீவில் சேதன பசளை உற்பத்திக்காக சிராட்டிக்குளம் பகுதியில் 49 ஏக்கர் காணி ஒதுக்கீடு!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

இயற்கை சேதன பசளை உற்பத்திக்காக முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிராட்டிக்குளம் பகுதியில் 49 ஏக்கர் விஸ்தீரணத்தில் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மரியாம்பிள்ளை இக்னேசியஸ் என்பவரால் கோரப்பட்ட கோரிக்கைக்கமைவாக பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழு கூட்டத்தில் அரச/அரச சார்பற்ற திணைக்களங்கள்/கிராம மட்ட பொது அமைப்புக்களின் அனுமதியுடன் பிரதேச செயலகத்தால் குறித்த கோரிக்கை ஏற்கப்பட்டு மாவட்ட செயலகத்தின் அனுமதியுடன் அடுத்த சில வாரங்களுக்குள் குறித்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.இதேவேளை விண்ணப்பதாரியான மரியாம்பிள்ளை இக்னேசியஸிடம் குறித்த செயற்றிட்டம் தொடர்பில் வினவியபோது:

சேதன பசளை உற்பத்திக்காக நான் எமது கிராமத்தை தெரிவு செய்ததற்கான காரணம் எமது பிரதேசங்களில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்/யுவதிகளுக்கு ஒரு தொழில் வாய்ப்பினை வழங்கும் ஒரு செயற்றிட்டமாக நான் இந்த செயற்றிட்டத்தை மேற்கொள்கின்றேன், இதனை விட நச்சு தன்மையற்ற உர பாவனையின் அவசியத்தினை உணர்ந்து எதிர்காலத்தில் நச்சு பாவனையற்ற விவசாய விளைச்சல்களை எமது கிராமங்களில் செயற்படுத்துவதுமே இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்தார்.

## புத்தூரில் விபத்தில் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இரு சக்கர உழவு இயந்திரத்தில் உழுது கொண்டிருந்த குடும்பஸ்தர் உழவு இயந்திரம் புரண்டதில் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மதியம் தோட்ட நிலத்தை உழும் போது இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி தெய்வேந்திரன் என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதே வேளை மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காட்டுயானைகளினால் வாழ்வாதாரம் அழிப்பு

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரி பகுதியில் நான்கு காட்டுயானைகளின் அட்டகாசம் காணப்படுகிறது.

நேற்று குறித்த பகுதியில் அறுவடைக்குத் தயாராகவிருந்த 1800 மரவள்ளிகள் இரவு 1.00 மணியளவில் நான்கு காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளது. குறித்த யானைகள் அதிகாலை 4.00மணிவரை தமது வாழ்வாதாரத்திற்காக வைக்கப்பட்ட மரவள்ளி, வாழை, தென்னைமரம் என்பனவற்றை முற்றாக அளித்துள்ளதாகவும், வாழ்வாதாரத்தினை முற்றாக அழித்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிராம சேவையாளர் மற்றும் கிளிநொச்சி பிரதேச செயலர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என பலருக்கும் தெரிவித்துள்ள நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கானை குளத்தில் சடலமாக மீட்பு!

**யாழ்.விசேட நிருபர்**

தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் மூன்று நாட்களாகக் காணாமற்போன நிலையில் சங்கானை மண்டிகைக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மாதகலைச் சேர்ந்த கடம்பன் (வயது 38) என்பவரே உயிரிழந்துள்ளார். உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளரான அவர் மூன்று நாட்களாக காணாமற்போயிருந்தார் என்று இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவரது சடலம் வெள்ளிக்கிழமை சங்கானை மண்டிகைக்குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பட்டப்போட்டி

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முதல் தடவையாக பட்டப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடாத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காட்டிலேயே இப் போட்டிகள் பிறபகல் 4:00 மணிக்கு இடம் பெற்றன.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட மற்றும் பிரதேசத்திற்கு வெளியே என இரு பிரிவுகளாக இப் போட்டிகள் இடம்பெற்றன.

அருட்தந்தை வணக்கத்திற்க்குரிய ரமேஷ் அடிகளார் தலைமையில் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டு கழகத்தால் நடாத்தப் பட்ட இப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளருமான எம் ஏ சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் அ சா அரியகுமார், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன்,கேசவன் சயந்தன், மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட்ட அதிதிகளும் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.





கட்டைக்காடு கிராமசேவகர் ச.காந்தரூபன், முன்னாள் கிராம சேவகர் வி.சுரேஸ்குமார், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி ச.திரவியராசா, கட்டைக்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ம.வசந்தகுமார்,கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டு கழக தலைவர் பி.சௌந்தர்ராஜன் உட்பட பலரும் மங்கள விளக்கை ஏற்றியதுடன் பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

இப் போட்டிக்கு நடுவர்களாக வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி அதிபர் லயன் வே.பரமேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சி.பிரசாத், சமாதான நீதவான் வசந்தகுமார் ஆகியோர் கடமை வகித்தனர்.

இப் போட்டிக்கு வடமராட்சி கிழக்கு, மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்க்கு வெளியேயிருந்தும் 30 பட்டங்கள் போட்டியில் பங்கு கொண்டன.

பரிசு தொகையாக வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட மற்றும் பிரதேசத்திற்க்கு வெளியே இருந்து பங்கு பற்றியவர்களுள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. முதலாம் பரிசாக ரூபா 20000 மும் இரண்டாம் பரிசாக ரூபா 15000 மும் மூன்றாம் பரிசாக ரூபா 10000மும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் முதாலமிடத்தினை அன்னப்பட்சி பட்டமும், இரண்டாம் இடத்தினை litro gas லிற்றோ காஸ் பட்டமும் மூன்றாம் இடத்தினை சுழலும் பெட்டிப் பட்டமும் பெற்றிருந்தன.இப் போட்டிகளை கண்டுகளிக்க பல இடங்களிலிருந்தும், சுமார் 5000 பேர் வரை கலந்து கொண்டனர்.

# வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் நிர்வாகத் தெரிவு






**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் நிர்வாகத் தெரிவு நேற்று (16.01) இடம்பெற்றது.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் வவுனியா மாவட்ட உதைப் பந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் தலைவர் ஏ.நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர் கால நடவடிக்கைகள் குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றதுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்க தலைவராக ஏ.நாகராஜன், செயலாளர் எஸ்.சௌமியன், பொருளாளர் ஏ.ஆர்.எம்.லரீப்பும் போட்டியின்றி மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன், உபதலைவர்களாக எஸ்.எம்.ஹாமீம், ஐ.பரமநாதன், எஸ்.நந்தகேசன், எம்.புலேந்திரன், உப செயலாளர் (நிர்வாகம்) எம். சுகந்தன், உப செயலாளர் (சுற்றுப் போட்டி) ஆர்.எம்.இஸ்ஸம, உப பொருளாளர் ஜி.பிரசாந் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்கள் 5 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில், இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தின் பிரதி செயலாளர் தி.வரதராஜன், காலி மாவட்ட உதைப்பந்தாட்ட சங்க தலைவரும், மன்னார் மாட்ட பொலிஸ் அத்தியட்சகருமான டில்சாந் நாகவத்த மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இளைஞர்களுக்கு இடையிலான மோதலில் சமாதானம் பேசியவரின் வீடு உடைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ். ஓட்டுமடம் காக்கைதீவு வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறை கும்பல் வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றிருக்கின்றது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தொியவருவதாவது,

ஓட்டுமடம் காக்கைதீவு வீதியில் ஒரு இளைஞரை மற்றொரு இளைஞர் குழு தாக்குவதை அப்பகுதியால் வாகனத்தில் வந்த ஒருவர் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து வாகனத்தை நிறுத்திய அவர் சமாதானமாக பேசி பிரச்சினையை முடித்துவைக்க முயற்சித்த நிலையில், அங்கு இளைஞன் ஒருவன் மீது தாக்குதல் நடத்திய குழு சமாதானம் பேச முயற்சித்தவர் மீதும், அவருடைய வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளது.

இதனையடுத்த அந்த பகுதியால் சிவில் உடையில் வந்த பொலிஸார் என கூறப்படும் நபர்களை கண்டதும் அங்கு குழப்பம் விளைவித்த குழு அங்கிருந்து சென்றுள்ளது.

இந்நிலையில் சமாதானம் பேசுவதற்கு சென்றவரையும், தாக்குதலுக்கு இலக்கான இளைஞனையும் அங்கு சிவில் உடையில் வந்த பொலிஸார் என கூறிய நபர்கள் அழைத்து சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யுங்கள் என ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

அதற்கமைய இருவரும் பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்த நிலையில் சமாதானம் பேச முயற்சித்தவரின் வீட்டிற்குள், வாள்கள் மற்றும் கம்பிகளுடன் நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த பொருட்களை அடித்து நொருக்கியதுடன், கதவுகளை வாளால் வெட்டி அட்டகாசம் புரிந்ததாகவும், வீட்டிலிருந்த ஒரு தொகை பணத்தை ரவுடிகள் எடுத்து சென்றதாகவும் பாதிக்கப்பட்ட வீட்டார் கூறினர்.

# இறுதி முயற்சியான மேன்முறையீட்டிலும் தோல்வி, நாடு கடத்தப்படுகின்றார் நோவக் ஜோகோவிச்!

## ஆஸி பகிரங்க டென்னிஸ் போட்டி இன்று





அவுஸ்திரேலியாவில் தங்குவதற்கான தனது இறுதி முயற்சியான மேன்முறையீட்டிலும் தோல்வியடைந்துள்ள நோவக் ஜோகோவிச் நாடு கடத்தப்பட்டார்.

தடுப்பூசி போடப்படாத செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச்சின் விசாவை இரத்து செய்யும் அரசாங்கத்தின் முடிவை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இன்று இடம்பெற்ற மேன்முறையீட்டு மனுமீதான விசாரணையில், 34 வயதான நோவக் ஜோகோவிச் பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அரசாங்கம் வாதிட்டது.இந்த வழக்கில் ஜோகோவிச் தோல்வியுற்றால் நாடு கடத்தப்படுவதோடு மூன்று ஆண்டுகள் அவுஸ்திரேலியாவுக்கான விசாவை பெற்றுக்கொள்வதற்கு தடை விதிக்கப்படும் .

அவுஸ்திரேலியாவுக்குள் நுழையவதற்கு அவசியமான தடுப்பூசியை அவர் செலுத்தி இருக்கவில்லை என்பதனால் அவுஸ்திரேலியா குடிவரவு அமைச்சர் அவரது விசா அனுமதியை இரத்து செய்தார்.ஜோகோவிச்சின் விசா இரத்தை திரும்ப பெற நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட நீதிமன்ம் அவரை தடுப்பு காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கடந்த 10ம் திகதி தீர்ப்பளித்தது. இதனை அடுத்து அவர் அவுஸ்திரேலிய பகிரங்கத்துக்கு தயாராக பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். ஆனால், அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் அலெக்ஸ் ஹாவ்கே தனது தனிப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி ஜோகோவிச்சின் விசாவை நேற்று முன்தினம் மீண்டும் இரத்து செய்தார். இதனால் அவர் மறுபடியும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த செயற்பாடு 'பகுத்தறிவற்றது மற்றும் நியாயமற்றது' என நோவக் ஜோகோவிச்சின் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், அவுஸ்திரேலிய நுழைவு அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தில், போலியான தகவலை உள்ளடக்கியதை நொவெக் ஜோக்கோவிச் ஒப்புக்கொண்ட நிலையில், அவரது விஸாவை மீண்டும் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மெல்போர்னில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில் அவர் விளையமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவால், அவுஸ்திரேலியப் பகிரங்க விருதைத் தற்காத்துக் கொள்ளும் வாய்ப்பை அவர் இழந்தார்.

மேலும், 21 முறையாக Grand Slam விருதை வெல்லும் பெரும் வாய்ப்பும் அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

அரசாங்க முடிவுக்கு ஆஸி டென்னிஸ் இரசிகர்கள் வரவேற்பு அவுஸ்திரேலிய டென்னிஸ் இரசிகர்களில் பலர், டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவிச்சின் விசா அனுமதி இரண்டாம் முறையாக இரத்து செய்யப்பட்டதை வரவேற்றுள்ளனர்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முடிவைப் பெரும்பாலானோர் ஆதரித்ததாக News Corp நிறுவனம் இணையத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்தது.

அதில், 60,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் 84 சதவீதத்தினர் அரசாங்க முடிவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.



# இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் பதவிக்கு விடை கொடுத்தார் விராட் கோலி

இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் பதவியில் இருந்து உடனடியாக விலகுவதாக விராட் கோலி அறிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டில் அஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியை விராட் கோலி முதல் முறையாக வழி நடத்தினார்.

பின்னர் அந்த பதவியில் தொடர்ந்த அவர் இறுதியாக இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்த கேப்டவுனில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணியுடனான போட்டி வரை தலைவராக செயற்பட்டார்.

இந்நிலையில் டுவிட்டரில் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள கோலி, அணியை சரியான திசையில் கொண்டு செல்ல 7 வருடங்களாக விடாமுயற்சியுடன் தினமும் போராடியதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வளவு நீண்ட காலத்திற்கு அணியை வழிநடத்தும் வாய்ப்பை வழங்கியதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பட்டு சபைக்கு அவர் நன்றியும் தெரிவித்தார். இதேவேளை இந்திய கிரிக்கெட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய திறமையான தனி நபராக தன்னைக் கண்டறிந்த எம்.எஸ் டோனிக்கு நன்றி என்றும் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

# பள்ளிவாசல்துறை லிவர் பூல் விளையாட்டு கழக சிரேஷ்ட வீரர்கள் கௌரவிப்பு



மாளிகைக்காடு குறூப் நிருபர்

பள்ளிவாசல்துறை லிவர் பூல் விளையாட்டு கழகம் தமது கழகத்தின் சிரேஷ்ட வீரர்களை கௌரவிக்கும் வகையிலும் இப்பிரதேசத்தில் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தினை இப்பிரதேசத்தில் பிரபல்யப்படுத்தும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி பள்ளிவாசல்துறை பொது கரப்பந்தாட்ட மைதானத்தில் பகல் இரவு போட்டியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் சுற்றுப்போட்டியில் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூன்று அணிகளாக பிரிக்கப்பட்டும் தற்போது உள்ள கனிஷ்ட அங்கத்தவர்களை மூன்று அணிகளாகவும் பிரித்து போட்டிகள் நடாத்தப்பட்டன.

சிரேஷ்ட உறுப்பினர்களைக்கான போட்டியில் ஆர் டீ பி அணியினர் சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டனர்.

கனிஷ்ட அங்கத்தவர்களுக்கான அணியினரான லிவர்பூல் சீ அணியினர் கனிஷ்ட பிரிவு சம்பியன் கிண்ணத்தினை சுவிகரித்தனர்.

இச்சுற்றுப்போட்டியில் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட உறுப்பினர்களும் பங்குபற்றி தமது திறமையினையை வெளிக்காட்டியதுடன் அவர்களுக்கு பதக்கமும்,நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப் பட்டது

# இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் 'சூப்பர் சீரிஸ்'– ரமிஸ் ராஜா கோரிக்கை



ஒவ்வொரு ஆண்டும் 4 நாடுகள் மோதும் சூப்பர் சீரிஸ் தொடர் நடைபெறும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என கூறினார்.

இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டிகளுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் அதிகம். இந்த இரு நாடுகளும் ஆசிய கோப்பை மற்றும் உலகக்கிண்ண தொடர்களில் மட்டும் தற்போது இணைந்து விளையாடி வருகின்றன. இதைத்தவிர இரு நாடுகளும் சேர்ந்து விளையாடும் சூழல் இப்போது இல்லை.

இந்நிலையில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து விளையாடும் 'சூப்பர் சீரிஸ்' 20க்கு 20 தொடர் ஒன்றை உருவாக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமிஸ் ராஜா கோரிக்கை வைத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் விளையாடும் கிரிக்கெட் போட்டிகளுக்கு அதிகம் ரசிகர்கள் உண்டு. இதையடுத்து இந்த 4 நாடுகளையும் இணைத்து 'சூப்பர் சீரிஸ்' என்ற தொடரை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இந்த தொடர் நடைபெறும் வகையில் ஐசிசி ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த தொடருக்கு மக்கள் மத்தியில் எப்படி வரவேற்பு இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. இந்த போட்டிகள் மூலம் வரும் லாபத்தை விதிமுறைகள்படி பிரித்து எடுத்துக் கொள்ளலாம்.

# வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் நிர்வாகத் தெரிவு




வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் நிர்வாகத் தெரிவு நேற்று (16) இடம்பெற்றது. வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் தலைவர் ஏ.நாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றதுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. அந்தவகையில் வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்க தலைவராக ஏ.நாகராஜன், செயலாளர் எஸ்.சௌமியன், பொருளாளர் ஏ.ஆர்.எம்.லரீப் ஆகியோர் போட்டியின்றி மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன், உபதலைவர்களாக எஸ்.எம்.ஹாமீம், ஐ.பரமநாதன், எஸ்.நந்தகேசன், எம்.புலேந்திரன், உப செயலாளர் (நிர்வாகம்) எம்.சுகந்தன், உப செயலாளர் (சுற்றுப்போட்டி) ஆர்.எம்.இஸ்ஸாம், உப பொருளாளர் ஜி.பிரசாந் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்கள் 5 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தைப்பொங்கலை முன்னிட்டு கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

காரைதீவு குறூப் நிருபர்



தமிழர்திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு அமரர் வை.நல்லரெத்தினம் ஞாபகார்த்தமாக காரைதீவு விளையாட்டுக்கழகம் நடாத்திய வருடாந்த கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 3 தினங்களாக நடைபெற்று கடந்த (15) இறுதிப்போட்டி இடம்பெற்றது.

காரைதீவு கடற்கரையில் விசேடமாக அமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானத்தில் இச்சுற்றுப் போட்டி நடைபெற்றது. 14அணிகள் பங்கேற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கேஎஸ்ஸி (KSC)கழகத்தின் இருஅணியினர் மோதினர். அணி 'ஏ' வீரர்களான வை.வருணுஜன் வி.டிலக்ஷன் சாம்பியன்களாகவும் அணி'பி' வீரர்களான பி.சுலக்ஷன் பி.அனோஜன் றன்னஸ்அப் இரண்டாமிடத்தையும் பெற்றனர். சுற்றுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா கழகத்தலைவர் வெ.அருள்குமரன் (ஆசிரியர்) தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கழகப் போசகர்களான பிரதேச செயலாளர் ஜெகராஜன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே.இராஜேந்திரன், ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சாதனை படைத்த மாணவிக்கு பாராட்டு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்.நாவற்காடு கிராமத்தினை சேர்ந்த ம.மமே.நாவற்காடு நாமகள் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கற்கின்ற மாணவி சுரேஸ் மயூரா கிழக்கு மாகாண மட்டத்தில் குண்டு போடுதலில் முதலாம் இடமும், பருதி வட்டம் வீசுதலில் மூன்றாம் இடத்தினையும் பெற்று, இளைஞர் கழக ரீதியில் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தினை பெற்று பாடசாலைக்கும், கிராமத்திற்கும், பிரதேசத்திற்கும் புகழை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இவரின் இந்த சாதனையை நிலைநாட்டிய மாணவி சுரேஸ் மயூரா, மற்றும் அவரை நெறிப்படுத்திய உடற்கல்வி ஆசிரியர் சுபாஸ், பயிற்றுவிப்பாளர் அவர்களுக்கும், அக்னிச் சிறகுகள் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் ச.விஜேந்திரன் நிதி அனுசரணையில் வியாழக்கிழமை (13) நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் அக்னிச் சிறகுகள் பேரவையால் பாராட்டி வாழ்த்தி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவினையொட்டி கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## சம்பியனாக எவர்டொப் ஏ அணி தெரிவு

(பாலமுனை விசேட நிருபர்)




தைக்காநகர் எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவினையொட்டி, நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், எவர்டொப் ஏ அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

அட்டாளைச்சேனை தைக்காநகர் எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவினையொட்டி, அக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் தைக்காநகர் ஸஹ்றா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் எவர்டொப் ஏ மற்றும் எவர்டொப் பீ ஆகிய அணிகள் மோதிக்கொண்டது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய எவர்டொப்பீஅணியினர்46ஓட்டங்களைப் பெற்றனர். 47ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவர்டொப் ஏ அணியினர் 48 ஓட்டங்களைப் பெற்று வெற்றியினை தனதாக்கிக் கொண்டனர். எவர்டொப் ஏ அணி வீரர் ஸராப் 25ஓட்டங்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார். இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் ஸராப் தெரிவுசெய்யப்பட்டார்.

எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எல்.அஜ்மல் தலைமையில், இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.றபீக் கௌரவ அதிதியாகவும், சமூக சேவையாளர்களான என்.இம்தியாஸ், கே.எல்.ஏ.கபூர், என்.எம்.றசாத், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.அஸ்வத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திறமைகளை வெளிப்படுத்திய அணிகள் மற்றும் வீரர்களுக்குரிய பரிசில்கள் மற்றும் வெற்றிபெற்ற அணிக்குரிய வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசு என்பவற்றை நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 42 பலம்பொருந்திய அணிகள் பங்குபற்றிய இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது, அக்கரைப்பற்று மிஸ்டர் கிளாக் நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 17ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.